பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 18 வெள்ளிக்கிழமை 04.10.2024 கதிர் 331



## வரி நிவாரணங்களை வழங்குவோம் நாணய நிதியத்திடம் அநுர தெரிவிப்பு

இலங்கை மக்களுக்கு வற், வருமான வரி நிவாரணங்களை மக்களிற்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க கொழும்புக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

பொருளாதார ☞8

## கெஹலிய மீதான ஊழல் வழக்கு நவம்பர் 29இல் விசாரணைக்கு

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆகியோருக்கு எதிராக ☞8

## ‘பார்’ அனுமதி பெற்ற அரசியலாளர் விவரத்தை உடன் அம்பலப்படுத்துக

### சுமந்திரன் வலியுறுத்து

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்களை தற்போதைய ஆளும்தரப்பு வெளியிடவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் மதுபான நிலையங்கள் திடீர் என ☞8

## ஜனாதிபதியை நேற்று சந்தித்தார் சுமந்திரன்

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ☞9

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்த்தேசியம்பேசும்கட்சிகளை ஒற்றுமையாக்கி, வழிப்படுத்தி, அவற்றைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்ற சிந்தனையுடன், வேணவாவுடன் சென்ற பேராசிரியர், பத்தி எழுத்தாளர்கள் எல்லோருக்கும் ”அரசியல் என்றால் என்ன” என்று செமத்தியாக வகுப்பெடுத்து அனுப்பியிருக்கின்றன அந்தக் கட்சிகள்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்று பெயரில் தமிழ்த் தேசியம்பேசிய அரசியல்கட்சிகளுடன் இணைந்து தாமும் சரிசமமான அந்தஸ்து உடையவர்கள் என்று செயற்பட்ட பேராசிரியர் மற்றும் அரசியல் பத்தி எழுத்தாளர்களின் இன்றைய நிலையைத்தான் இப்படிச் சொல்கின்றேன். இந்த அரசியல் கட்சிகளைப் புனிதர்களாக்கி ஒற்றுமை, தேசக் கட்டுமானம் என்ற முழக்கங்களின் கீழ் தமிழ் மக்களிடம் மீண்டும் ☞2

## நீதிவானுக்கு கொலை மிரட்டல்

கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகேவையும் அவரது குடும்பத்தாரையும் கொல்வோம் என முகநூல் பக்கத்தில் வெளியான பதிவு தொடர்பில் விசாரணை நடத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே, பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹொக்கி கட்டா மற்றும் குடு சலிது ஆகிய இருபாதாள உலகக்குழுக்கள் ☞8

# சங்கு சின்னம் இனிமேல் ஜனநாயகக் கூட்டணிக்கே

## ஏமாந்தது தமிழ் மக்கள் பொதுச் சபை

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பால் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக நிறுத்தப்பட்ட அரியநேத்திரனின் சின்னமாகப் பயன்படுத்தப்பட்ட சங்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பின் சரிபாதி உரிமையைக் கொண்டிருந்த தமிழ் மக்கள் பொதுச் சபை இந்தச் சின்னத்தை நாடாளுமன்றத் தேர்தலில் பயன்படுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்குப் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவில் தமக்கிருந்த சட்டபூர்வ அந்தஸ்தைக் கொண்டு சின்னத்தைக் கைப்பற்றியிருக்கிறது பொதுக்கட்டமைப்பின் ஒரு பகுதியான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி.

சங்கு ஜனநாயகக் கூட்டணியால் கைப்பற்றப்பட்டமையை ஈ.பி.ஆர்.எல்.எப். ☞2

## அபிவிருத்தி யுகத்தை உருவாக்கித் தருவோம்

### சஜித் உறுதிமொழி

சொந்தக் காலில் நிற்கக்கூடிய பெருமைக்குரிய தலைமுறையை உருவாக்கி, அனைத்து மக்களையும் உள்வாங்கிய அபிவிருத்தி யுகத்தை உருவாக்கித் தருவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பு கிழக்கு தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் ☞8

## முன்னாள் எம்.பிக்கள் இருவர் மௌபின கட்சியில் இணைவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ராஜிகா விக்ரமசிங்க மற்றும் தஹம் ஆகியோர் நேற்று மௌபிம ஜனதாக் கட்சியில் இணைந்துள்ளனர்.

கொழும்பில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடந்த ☞8



## அபிவிருத்தித் திட்டங்களுக்கு கொரிய வங்கியின் நிதி உதவி

இலங்கையின் புதிய ஆளும் தரப்பின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க கொரிய எக்ஸிம் வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

கொரியா எக்ஸிம் வங்கியின் அதிகாரிகள் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதி பதியின் செயலாளர் ☞9

## அனைத்துத் தடைகளும் நீக்கம் ஊழல் விசாரணைகள் ஆரம்பம்

### சவால் விட்டோருக்கு விரைவில் பதில் என்கிறார் லால் காந்த

ஊழல், மோசடி விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அரச கட்டமைப்பில் காணப்பட்ட அனைத்துத்தடைகளையும்நீக்கியுள்ளோம். அனைத்து அதிகாரிகளையும் புதிததாக நியமித்துள்ளோம். ஊழல் மோசடிகள் சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமக்குச் சவால் ☞8

## கருத்துச் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்; உடன் தகுந்த நடவடிக்கை தேவை

### யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வளாகத்திற்குள் கருத்துச் சுதந்திரத்தை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளைக் கண்டிப்பதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்தெரிவித்துள்ளது. இத்தகைய இழிசெயல்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் அதுபல்கலைக்கழகநிர்வாகத்திடம் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் தமிழ்த் தேசியத்தை மட்டும் நோக்காகக்கொண்டு வாக்களிக்காது பல தரப்பட்ட விடயங்களையும் சிந்தித்து வாக்களிக்கவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ☞9

## நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் உள்ளாட்சி சபைகளுக்கான தேர்தல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் பொதுத் தேர்தல் நிறைவடைந்ததும் அந்த தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ☞8

## நாடாளுமன்றத் தேர்தலில் வென்றால் அநுரவுடன் சேர்ந்து செயற்படத் தயார்

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

ஐக்கிய மக்கள் கூட்டணி நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து செயற்படத் தயார் என அதன் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொண்டு வருவது விழலுக்கு இறைத்த நீர் என்பதை இந்தப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பதற்கான காரணமாகவும் அதனையே குறிப்பிட்டிருக்கின்றேன்.

ஆனால், தமிழ் தேசிய மக்கள் பேரவையின் தோல்வியில் இருந்த பாடம் கற்றுக்கொண்டிருக்கின்றோம் என்று கூறிக்கொண்டு இந்த அரசியல் கட்சிகளை நம்பி அவற்றுடன் ஒப்பந்தம் செய்து கையெழுத்திட்டார்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகளான தமிழ் மக்கள் பொதுச் சபையினர். அரசியல் கட்சிகள் மற்றும் பொதுச் சபையினர் என இரு பகுதியினருக்கும் சம அந்தஸ்து எனக் குறிக்கப்பட்டே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதனடிப்படையில்தான் பொதுக் கட்டமைப்பின் தலைமைப் பீடத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு 7 இடங்களும் பொதுச் சபையினருக்கும் 7 இடங்களும் வழங்கப்பட்டன. இதன் மூலம் அரசியல் கட்சிகளுக்கு சமமான வகிபாகத்தை, அதிகாரத்தைத் தாமும் கொண்டிருப்பதாகப் பொதுச் சபையினர் நம்பினர். ஆனால் அவர்களை நம்ப வைத்துக் கழுத்தறுத்துவிட்டன அரசியல் கட்சிகள்.

பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகித்த 7 கட்சிகளில் 5 கட்சிகள் ஏற்கனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிற அரசியல் கூட்டாக ஏற்கனவே இயங்கி வந்தன. இவை தவிர விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கம் என்பன எஞ்சிய இரு கட்சிகளாகும். மொத்தத்தில் பொதுக் கட்டமைப்பில் ஜனநாயகக் கூட்டணி, பொதுச் சபை, இரு கட்சிகள் என்று மூன்று தரப்புக்கள் இருந்தன. இந்தப் பொதுக் கட்டமைப்பால் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக நிறுத்தப்பட்டவரான அரியநேத்திரனுக்கு சங்கு சின்னமாகப் பெறப்பட்டது. தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரனின் யோசனையின் கீழேயே இந்தச் சங்குச் சின்னத்தைத் தான் தேர்ந்தெடுத்தார் என்று அரியநேத்திரன் சிறீதரன் வீட்டிலேயே வைத்துக் கூறியிருந்தார்.

அப்படிப்பட்ட சங்கு சின்னத்தை இப்போது பொதுக் கட்டமைப்பின் ஒரு தரப்பான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் சுருட்டிக்கொண்டு சென்றுவிட்டனர். நாடாளுமன்றத் தேர்தலில் அந்தச் சின்னத்தைப் பயன்படுத்தவேண்டாம் என்று தமிழ் மக்கள் பொதுச் சபையினர் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டு சின்னத்தைக் கைப்பற்றிக்கொண்டனர் ஜனநாயகக் கூட்டணியினர். அவர்களுக்கு சங்கு சின்னம் வழங்கப்படுவதற்கு பொதுச் சபையினர் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் தேர்தல் ஆணைக்குழு அதனைப் புறந்தள்ளிவிட்டது.

பொதுக்கட்டமைப்பு ஒரு பதிவுசெய்யப்பட்ட கட்சியோ அரசியல் கூட்டோ கிடையாது. அதனால் தேர்தல் ஆணைக்குழுவில் அதற்கு சட்டபூர்வமான எந்த மதிப்பும் கிடையாது. ஆணைக்குழுவைப் பொறுத்தவரையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒரு சுயேச்சை வேட்பாளர் மட்டுமே. அவரைப் பின்னால் நின்று இயக்கிய பொதுக் கட்டமைப்பினர் அல்லது பொதுச் சபையினர் பற்றி தேர்தல் ஆணைக்குழுவிற்கு எந்த அக்கறையும் இல்லை. ஆனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட ஒரு அரசியல் கூட்டு. எனவே 5 வருடங்களுக்கு ஒரு தடவை தனது சின்னத்தையோ பெயரையோ மாற்றுவதற்கான வாய்ப்பும் சட்டபூர்வ உரிமையும் அதற்கு இருக்கின்றது. இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அரசியல் கட்சிகள் பொதுச் சின்னமாகப் பயன்படுத்தப்பட்ட சங்கு சின்னத்தைத் தமக்குத் தருமாறு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்து அதனைச் சுருட்டிச் சென்றுவிட்டது.

பொதுக் கட்டமைப்பில் ஜனநாயகக் கூட்டணியிரைவிட மற்றைய தரப்பினரே அதிகமுள்ளனர். அதாவது பொதுச் சபையினரும் மற்றைய இரு கட்சிகளுமாக 9 பேர் உள்ளனர். அப்படிப் பார்த்தால் சங்கு சின்னத்தை ஜனநாயகக் கூட்டணியினர் பயன்படுத்தக்கூடாது என்கிற நிலைப்பாட்டிலேயே அதிகம் பேர் இருக்கின்றனர். ஆனால் அதையெல்லாம் அரசியல் கட்சிகள் மதிக்கவோ கருத்திலெடுக்கவோ இல்லை. அவர்களின் எதிர்ப்பையும் மீறி மக்கள் மத்தியில் ஏற்கனவே அறிமுகமாகிவிட்ட அந்தச் சின்னத்தைத் தம் வசப்படுத்திவிட்டனர். அவர்களுடன் சம தரப்பாக பொதுக் கட்டமைப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு கையெழுத்து வைத்தவர்கள் இப்போது எதுவும் செய்ய முடியாமல் வேடிக்கை பார்க்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசியல் என்றால் என்ன என்பதும் கட்சிகள் எத்தகைய அரசியல் துரோகத்திற்கும் துணிந்து நிற்கும் என்பதும் இப்போது அவர்களுக்குப் புரிந்திருக்கும். இந்தப் பொதுக் கட்டமைப்பின் பட்டறிவு மற்றும் தமிழ் மக்கள் பேரவையில் ஏற்கனவே பெற்ற பட்டறிவு என்பவற்றின் அடிப்படையில் அடுத்த தடவை அவர்கள் இன்னும் ஒரு சிறப்பான யோசனையுடன் தமிழ் மக்களைச் சந்திப்பார்கள் என்று நம்புவோமாக.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## சங்கு சின்னம் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று உறுதிப்படுத்தினார்.

யாழ். கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியானது பதிவுசெய்யப்பட்ட ஒரு கட்சியாக இருக்கின்றது. இந்தக் கூட்டணியில் நாங்கள் உட்பட ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட போதும் நாம் அதில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவையும் தாக்கல் செய்திருந்தோம். இந்தக் கூட்டணியின் சின்னமாககே குத்துவிளக்கு இருந்த்து.

ஆனால், இப்போது நடைபெற்று முடிவடைந்திருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்களை ஒன்றிணைத்த தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியன இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தியிருந்தது.

அந்தப் பொது வேட்பாளரின் தேர்தல் சின்னமாக சங்குச் சின்னமும் வழங்கப்பட்டு அதற்கான பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டதற்கமைய தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி இலட்சக்கணக்கில் மக்கள் அதற்கு வாக்களித்தும் இருந்தனர்.

இதேபோன்று பல்வேறு கட்சிகளை உள்ளடக்கியதாக ஒற்றுமையை வலியுறுத்தி ஓரணியில் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாங்கள் போட்டியிடுகின்றமையால் தமிழ் மக்களின் ஒற்றுமையின் சின்னமாக விளங்கிய சங்கு சின்னத்தை எமது கூட்டணியின் சின்னமாக்குவதற்குத் தீர்மானித்திருந்தோம்.

இதற்கமைய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஒருமித்த தீர்மானமாக சங்கு சின்னத்தை அதில் அங்கம் வகித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு இருந்தது.

இதனடிப்படையில் சங்கு சின்னத்தை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் புதன்கிழமை தேர்தல் ஆணையகத்தால் சங்கு சின்னம் எமக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது.

இதற்கமைய எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக ஒற்றுமையின் சின்னமான சங்கு சின்னத்தில் நாம் போட்டியிட இருக்கின்றோம். அதிலும் வடக்கு, கிழக்கு முழுவதும் நாம் போட்டியிடுகின்ற அதேநேரத்தில் கொழும்பிலும் இம்முறை போட்டியிடுவது தொடர்பில் ஆராயந்து வருகின்றோம் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தின் கீழ் மீண்டும் இணை வருமாறு தமிழ் அரசுக் கட்சி விடுத்த அழைப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது:

இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியொரு கட்சியாகவே இப்போது இருக்கின்றது. ஆனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினராகிய நாங்கள் ஐந்து கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டணியாக இருக்கின்றோம். ஆகையினால் தமிழரசுக் கட்சியினரே எமது கூட்டணியில் வந்து இணைந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள பல்வேறு கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வந்தது போன்று தற்போதும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள பல்வேறு கட்கள் ஒன்றிணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகச் செயற்படுகின்றோம். இந்தக் கூட்டணியில் தற்போது ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

ஆகையினால் தமிழ் மக்களுக்கு ஐக்கியம் வேண்டும் எனக் கருதுகின்றவர்களை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் வந்து இணையுமாறு நாங்கள் அழைப்பு விடுத்திருந்தோம். எமது இந்த அழைப்புக்குப் பதிலளிக்காத இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் இந்தத் தேர்தலில் மீண்டும் வந்து போட்டியிடுமாறு கூறுயிருக்கின்றனர். அந்த அழைப்பானது உளப்பூர்வமாக இல்லாமல் வெறுமனே

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ஐ.நா. பிரதிநிதி நேற்று அநுரவுடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரூ பிரான்ஸ் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியா குட்டாரஸின் வாழ்த்துச் செய்தியை ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட இணைப்பாளர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் வழங்கி வைத்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பண்பான தன்மைக்கும் வாழ்த்து தெரிவித்த இணைப்பாளர் ஜனாதிபதியின் தேர்தல் அறிக்கையையும் வரவேற்றார் என்று ஜனாதிபதி செயலகத்தின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

மக்கள் எதிர்பார்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதால் எதிர்வரும் காலம் சவாலானதாக அமையுமென சுட்டிக்காட்டிய ஐ.நா. இணைப்பாளர் சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் வேலைத் திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு ஐ.நா. ஒத்துழைப்பு வழங்குமெனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் ஒழிப்புத் திட்டத்துக்கு பாராட்டு தெரிவித்த மார்க் அண்ட்ரூ, அந்த முயற்சிகளுக்கு ஐ.நா. தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்தார்.

அதேபோல் சமூகத்தில் தேசிய சமாதானத்துக்கான புதிய அரசாங்கத்தின் பூர்வாங்க முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த வதிவிட இணைப்பாளர், ஒவ்வொரு தரப்பினருக்கு மத்தியிலும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவித்தார்.

அதேபோல் நாட்டுக்கு நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமெனவும் அவர் உறுதியளித்தார்.

## கிழக்கு பிரதி பொலிஸ் மா அதிபர்

# அஜித் ரோஹனவுக்கு கொழும்புக்கு மாற்றம்

தற்போது கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றி வரும் அஜித் ரோஹனவுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நிதி மோசடிப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்று அம்பாவில, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 9ஆவது நாடாளுமன்றத்தில் 241 உறுப்பினர்கள் பதவி வகிப்பு

அண்மையில் கலைக்கப்பட்ட இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தில் மொத்தமாக 241 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

2020ம் ஆண்டு ஒகஸ்ட் 20 ஆரம்பமான 9ஆவது நாடாளுமன்றம் 2024 செப்டம்பர் 24 நிறைவுறுத்தப்பட்டுக் கலைக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் 16 சந்தர்ப்பங்களில் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களிடையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக, நாடாளுமன்ற அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தேர்தலை அடுத்து உடனடியாக நாடாளுமன்றுக்குத் தெரிவாகின்ற 225 உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, 19 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் காலமானமை மற்றும் பதவி விலகல்கள் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்களுக்காகக் குறித்த 19 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான ஜயந்த கெட்டகொட பதவி விலகிய நிலையில் அவருக்குப் பதிலாக பஸில் ராஜபக்ச நியமிக்கப்பட்டார். பின்னர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அஜித் நிவாட் கப்ரல் பதவி விலகியதும், மீண்டும் ஜயந்த கெட்டகொட நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் டஹ்மான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பதவி விலகிய நிலையில், அவருக்குப் பதிலாக ஏ.எச்.எம்.பௌசி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

எனினும் அதன் பின்னர் நீதிமன்ற உத்தரவால் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்த டயனா கமகேவுக்கு பதிலாக முஜிபுர் ரஹ்மான் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார்.

எவ்வாறாயினும் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்த ஹரின் பெர்ணாண்டோவுக்கு பதிலாக பிறிதொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் இந்தக் காலப்பகுதியிலேயே நாடாளுமன்றுக்குத் தேசியப் பட்டியல் ஊடாக காலம் தாழ்த்தி உள்வந்த ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பதவி விலகலை அடுத்து நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

இந்தக் காலப்பகுதியில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகி இருந்தனர். ரஞ்சன் ராமநாயக்க மற்றும் டயானா கமகே ஆகியோர் தகுதி இழப்பு செய்யப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

அங்கம் வகிக்கும் கட்சிகளிலிருந்து விலக்கப்பட்டதன் காரணமாக, நசீர் அஹமட், மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்ணாண்டோ ஆகியோரும் பதவி நீக்கப்பட்டனர். அதேநேரம் இந்தக் காலப்பகுதியில் இரா.சம்பந்தன், அமரகீர்த்தி அத்துகோரல, சனத் நிசாந்த மற்றும் எச். நந்தசேன ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர் காலமாகியிருந்தனர்.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் காரணமாக, ரணில் விக்ரமசிங்க மற்றும் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு வேறு நபர்கள் நியமிக்கப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மலையக, ஈழதமிழ் மக்களுக்கு இனி இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம்; நியாயம்தான் வேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து



வெற்றிபெற்று பதவியேற்றுள்ள நண்பர் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். அரசியல் குரோதங்கள், கட்சி வேறுபாடுகளின்றி பொறுப்புள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் செயற்படுவோம். நீங்கள் உறுதியளித்த உயிர்த்த ஞாயிறு படுகொலை சூத்திரதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது, ஊழல் ஒழிப்பு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்டின் சொத்துகளை மீட்பது, மத்திய வங்கி பிணை முறி கொள்ளையரை தண்டிப்பது, சிவராம், நடேசன், எகனிலியகொட, லசந்த போன்ற ஊடகவியலாளர்கள் கொலைதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் இரு கரங்களை உயர்த்தி ஆதரவு வழங்குவோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அவர், ஜனாதிபதி அனுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு குறிப்பாக மலையக தமிழருக்கும் ஈழத் தமிழருக்கும் இனிமேல் இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ள அவர் மேலும் கூறுகையில் –

இந்நாட்டில் 200 வருடங்கள் வாழ்ந்துவிட்ட மலையக பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அங்குலம் நிலம் கூட இல்லை என அனுதாபப்பட்டு நீங்கள் தேர்தலுக்கு முன் பேசிய ஊடக காணொளியை கண்டேன். மலையக மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ளவும், வாழ்வாதார தேவைகளுக்காகவும் காணி வழங்குங்கள். காணி உரிமை வழங்கி அவர்களை இலங்கை தேசிய நீரோட்டத்துக்குள் கொண்டு வாருங்கள். உங்கள் 'சிஸ்டம் சேஞ்' என்ற முறை மாற்றத்தை பெருந்தோட்டத்துறையில் ஆரம்பித்து, நமது மக்களை பெருந்தோட்ட தொழிலில் பங்காளியாக்குங்கள்.

வடக்கு, கிழக்கு ஈழத்தமிழ் சகோதரர்கள் பற்றியும் நீங்களும் உங்கள் கட்சியாளர்களும் அனுதாபப்பட்டு பேசியுள்ளதை கண்ணுற்றேன். ஆகவே, அரசியல் கைதிகளை விடுவியுங்கள். இப்போதுதான் யுத்தம் இல்லையே? ஆகவே விடுக்கப்படாத அனைத்து தனியார் காணிகளையும் உடன் விடுவியுங்கள். காணாமல் போனார் பற்றி பேசியுள்ளீர்கள். அவர்களின் குடும்பத்தவருக்கு நியாயம் வழங்குங்கள். உடனடியாக அங்கே மாகாண சபை தேர்தல்களை நடத்துங்கள். மாகாண சபை தேர்தல்களை நடத்தும்படி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டு கேட்டு நான் அலுத்தே போய்விட்டேன்.

ஆகவே, ஜனாதிபதி அனுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையக தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்.

சர்வதேச குழந்தைகள் தினத்தன்று, வவுனியாவில் ஜனநாயக ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த வலிந்து காணாமல்போன உறவு தாய்மார்களை, 'தான் அனுரவின் ஆள்' என்று கூறி ஒரு காடையர் மிரட்டியுள்ளார். 'இனிமேல் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை செய்யவிட மாட்டோம்' எனவும் கூறியுள்ளார். இதை கூறி நான் அரசியல் நோக்கில் உங்களை ஒருபோதும் குற்றம் சாட்டவில்லை. ஆனால், உங்கள் பெயரை பகிரங்கமாக பயன்படுத்தி, பெண்களை மிரட்டி, பயமுறுத்தியுள்ள இந்த நபரை உடனடியாக கைது செய்யுங்கள்.

திருடர்களைப்பிடிக்க, கைதுசெய்ய, புதிய சட்டங்கள் கொண்டுவரவிருக்கும் சட்டங்களை திருத்த, வெளிநாட்டுக்கு தப்பி ஓடியவர்களை மீண்டும் இந்நாட்டுக்கு கொண்டுவர, அந்தந்த நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்ய நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம். நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்லும் நிறைவேற்று ஜனாதிபதியா அல்லது முழுமையாக இதை ஒழிப்பதா என அது பற்றி அமர்ந்து பேசுவோம். அதற்கும் முழு ஆதரவு தருவோம்.

இன்று உங்கள் ஆலோசகர்கள் இருவரும் மத்திய வங்கி ஆளுநரும், நிதி அமைச்சு செயலாளரும் சர்வதேச நாணய நிதியுடன் பேசப்போகிறார்கள். நல்ல விடயம். நாட்டின் நிதி நிலைமை உடைந்து நொறுங்கிய அன்று, நாம்தான் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்று முதன் முதலில் நாடாளுமன்றத்தில் கூறினோம். அப்போது பிற்காலத்தில் ரணிலுடன் இருந்த மொட்டு கட்சியினர் எம்மை எதிர்த்து கூச்சல் எழுப்பினார்கள். அது உங்களுக்கு தெரியும். இன்று சர்வதேச நாணய நிதியத்துடன் நீங்கள் பேசுகிறீர்கள். வரவேற்கிறோம். இது தொடர்பில் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவும் நாம் தயாராக உள்ளோம்.

வாக்கு எண்ணிகையில் அதிகம் பெற்றதால் நண்பர் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி ஆகியுள்ளார். இரண்டாம் இடத்துக்கு சஜித் வந்துள்ளார். ஆனால், நண்பர் அனுரகுமார திசாநாயக்க 50 விகிதம் வாக்குகள் பெறவில்லை. ஆகவேதான் மூன்றாம் இடத்தை பெற்றவர் முதல் அனைவரது வாக்கு சீட்டுகளிலும் இருந்த இரண்டாம், மூன்றாம் வாக்குகள் எண்ணப்பட்டன.

ஆகவே மூன்றாம் இடத்தை பெற்ற சிலிண்டருக்கு, இனி அரசியல் ரீதியாக இடம் இல்லை. எதிர்க்கட்சியான சிலிண்டருக்கு வாக்களித்தவர்கள், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் எமக்கு வாக்களிக்க வேண்டும்.

நாம் பொறுப்புள்ள நாடாளுமன்ற அரசாங்கமாக செயற்படுவோம். நாடு இன்னமும் வங்குரோத்து நிலையில்தான் இருக்கிறது. மொத்த கடன் தொகை கூடியுள்ளது. மொத்த வட்டித்தொகையும் கூடியுள்ளது. ஆகவே நாம் அனைவரும் சேர்ந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். நாம் பொறுப்புடன் கூட்டாக நாட்டை கட்டியெழுப்புவோம். – என்றார்.

இந்த நிகழ்வில் ரஞ்சித் மத்தும பண்டார, டலஸ் அழகப்பெரும, சம்பிக்க ரணவக்க, தயாசிறி ஜயசேகர, கபீர் ஹசிம், நிசாம் காரியப்பர் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# நாடாளுமன்ற தேர்தலில் 25 வீத பெண்களின் உரிமையை உறுதிப்படுத்தப்படவேண்டும்

## பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கருத்து



தமிழ்தேசிய கட்சிகளை ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ள பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பாராளுமன்ற தேர்தலில் 25 வீத பெண்களின் உரிமையை உறுதிப்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிவில் சமூக செயற்பாட்டாளர் மிரேகா நாகேஷ்வரன் மற்றும் மட்டக்களப்பு சிவில் வலையமைப்பின் உறுப்பினர்களான குணரெட்னம் யுனிதா, பிரசாந்தன் பவித்திரா ஆகியோர் கருத்துகளை முன்வைத்தனர்.

இதன்போது அவர்கள் கூறுகையில் -

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடந்த காலத்தில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டோம். ஆனால், ஒற்றுமையின்மை காரணமாக தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அரைவாசிக்கு மேல் குறைந்துள்ளது. ஒற்றுமையில்லாத நிலையே இதற்கு காரணமாக உள்ளது.

வடகிழக்கில் உள்ள அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்து தமிழர்களுக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும். தங்களுக்குள் இருக்கின்ற வேறுபாடுகளை மறந்து இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று கோருகின்றோம்.

அதேபோன்று நாடாளுமன்ற தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சிகள் பேச்சளவிலேயே பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்து பேசுகின்றனர். உள ரீதியாக அவர்கள் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்குவதை உறுதிப்படுத்துவதில்லை. வெறுமனே பேச்சளவிலேயே உறுதி கூறுகின்றனர்.

எனவே வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது வேட்பாளர் பட்டியலில் பெண்களின் அங்கத்துவத்தினை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம். - என்றனர். (05)

# இடைத் தரகர்களின் தலையீட்டை கட்டுப்படுத்தி விவசாய உற்பத்திக்கேற்ற இலாபம்வேண்டும்

## வடக்கு ஆளுநர் திட்டவட்டம்



விவசாயத்தை காலநிலைக்கு ஏற்ப கொண்டு செல்வதுடன் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்கிறபோது இடைத்தரகர்களின் தலையீட்டைக் கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு உற்பத்திக்கேற்ப லாபம் கிடைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் தெரிவித்தார்.

புதன்கிழமை திருநெல்வேலி விவசாய கண்காட்சியை ஆரம்பித்துவைத்து, அதில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில், 'சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி' எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி யாழ்ப்பாணம், திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகிறது.

மூன்று நாள்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுதானியங்கள், பயிர் உற்பத்திகள் உட்பட பல்வேறு வகையான விவசாய செயல்முறைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் விவசாய நிறுவனங்களை சார்ந்தவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டு இக்கண்காட்சியை பார்வையிட்டனர்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விரைவான நடவடிக்கை அவசியம்

**அரசுத் தலைவர் தேர்தலில் ஆதரவைப் பெறுவதற்காக முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலருக்கு மதுபான அனுமதிகளை வழங்கினார் என்கிற குற்றச்சாட்டு வாக்களிப்புத் தினத்திற்கு முன்பே சுறாவளியாகச் சுழன்றடிக்கத் தொடங்கிவிட்டது. அப்படி மதுபானக் கடை அனுமதியைப் பெற்று அதனைப் பல கோடி ரூபாய்க்கு விற்றார்கள் என்று வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.**

**இவர்களில் சிலரின் பெயர் விவரங்களை ஐக்கிய மக்கள் சக்தியுடன் அணிசேர்ந்திருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளர் தயாசிறி ஜயசேகர பகிரங்கப்படுத்தியிருந்தார். முழுமையான பெயர் பட்டியலைத் தான் வெளியிடுவார் ஏன்று தேர்தல் பரப்புரைகளில் அவர் தெரிவித்திருந்தாலும் அவரால் அது முடியவில்லை. ஆனாலும் இந்தப் பிரச்சினை சமூக ஊடகங்களிலும் மக்கள் மத்தியிலும் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.**

**வடக்கைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் நீதியரசர் விக்னேஸ்வரன் மட்டும் தாய், தந்தையர் அற்ற ஒரு பெண்ணுக்கு வாழ்வாதார உதவியாக மதுபான சாலை அனுமதியைப் பெறத் தான் சிபாரிசு செய்தார் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார். மற்றைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்எவரும்இதுபோன்றுஇதுவரையில்வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை. வன்னிமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் திலீபனும் இவ்வாறு மதுபான சாலைக்கான அ–னுமதியைப் பெற்று விற்றார் என்று பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி குறித்து அவர் வவுனியா காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கிறார். தான் அப்படி எந்த மதுபான விற்பனை அனுமதிகளையும் பெறவில்லை என்கிறார்.**

**பொதுத் தேர்தல் நேரத்தில் மக்களைப் பெரிதும் குளப்பத்திக்குள்ளாகியுள்ள இந்த விடயம் தொடர்பில் ஆளும் தரப்பில் முழுமையான விவரங்கள் வெளியிடப்படும், அரசியல் ஆதாயங்களுக்காக முன்னாள் ஆட்சியாளரால் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட மதுபான விற்பனை அனுமதிகள் பற்றி விவரங்கள் பெயர்ப் பட்டியலோடு வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு வந்தது. எனினும் புதிய அரசுத் தலைவராக அநுரகுமார திசநாயக்க பதவியேற்ற உடனேயே இந்த விவரங்கள் வெளியிடப்படும் என்று மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவி வந்தது. ஆனால் அது நடக்கவில்லை.**

**இந்த நிலையில், நேற்று அரசுத் தலைவரைச் சந்தித்த தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மனுதபான விற்பனை அனுமதியைப் பெற்ற மற்றும் பரிந்துரை செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களை வெளியிடுமாறு வலியுறுத்தியுள்ளார்.**

**மக்கள் பிரதிநிதிகளா நாடாளுமன்றத்திற்குச் சென்றவர்கள் சமூகத்தைச் சீரழிக்கும் குடியை ஊக்குவிக்கும் வகையில் மதுபான சாலைகளுக்கான அனுமதியைப் பெற்றிருப்பது பெரும் தவறு. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே முடியாதது. குடி குடியை மட்டுமல்ல நாட்டையும் கெடுக்கும் என்பதால் அது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. குறிப்பாக இளைஞர்கள் மதுபோதைக்கு அடிமையாகிச் சீரழிந்துகொண்டிருக்கிறார்கள். பல குடும்பங்கள் இந்தக் குடியால் நிலைகுலைந்துள்ளன. இத்தகைய நிலையில் மக்கள் பிரதிநிதிகளே இவ்வாறு மதுபான சாலைகளுக்கான அனுமதிகளைப் பெற்று விற்றும் அல்லது சிபாரிசு செய்தும் இருப்பது முற்றிலும்தவறானது. எனவே அத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் எவராயினும் அவர்கள் மக்கள் முன்பாக அம்பலப்படுத்தப்படவேண்டும். அந்த நடவடிக்கைகளை ஆளும் தரப்பு விரைவுபடுத்தவேண்டும்.**

**புதிய மாற்றத்தை ஏற்படுத்த விரும் அரசுத் தலைவரும் அவர் தலைமையிலான ஆளும் தரப்பும் இதுவிடயத்தில் கூடிய அக்கறை எடுத்து மக்களைச் சீரழிப்பதற்குப் பங்காற்றும் அரசியலாளர்களை அம்பலப்படுத்தவேண்டும். அதன் மூலம் எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தடுக்கவும் வேண்டும்.**



# மாயப் போர்வை

**என்.சத்தியமூர்த்தி**

புதிய அரசின் மூன்று உறுப்பினர் அமைச்சரவையின் முதல் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அயலுறவுத் துறை அமைச்சர் விஜித ஹேரத், இனப்பிரச்சினைக்கான தீர்வு, புதிய அரசமைப்புச் சட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் என்று கூறி உள்ளார். இது வரவேற்கப்பட வேண்டிய அறிவிப்பு. அல்லது, அவ்வாறுதான் அந்த அறிவிப்பை குறித்து எண்ணத் தோன்றுகிறது. ஆனால், உண்மை நிலை என்ன?

முதலில் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும். கடந்த பத்தாண்டுகளில், நான்காவது முறையாக புதிய அரசமைப்பு சட்டமும் அது சார்ந்து இனப்பிரச்சினைக்கான தீர்வு என்றும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகள் கூறி வந்துள்ளன. எப்போதெல்லாம் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ, அப்போதெல்லாம், புதிய அரசமைப்பு குறித்து பிரஸ்தாபிக்கப்படுவது வாடிக்கையாகி விட்டது.

இவற்றில் முதலில் வந்தது, போர் முடிந்த பின்னர் அப்போதைய மஹிந்த ராஜபக்ச அரசிற்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சு. பின்னொரு காலகட்டத்தில், நல்லாட்சி அரசு காலத்தில், நேரடியாக அரசமைப்புச் சபை மூலம் தீர்வை பெற்றுக்கொள்ளலாம் என்று ஏற்றுக்கொண்ட சம்மந்தன் வகையறா, மகிந்த தலைமையின் கீழ் மட்டும், நேரடி பேச்சு மூலமே தங்களுக்கு நீதி கிடைக்கும் என்று முரண்டு பிடித்தது.

மகிந்தவுடனான பேச்சியில் காணி, நிதி ஆகிய விடயங்களில், இரு தரப்பு பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டது. பொலிஸ் அதிகாரம் குறித்து பேச்சு தொடரும்போதுதான், மேற்குலகநாடுகளும்அவற்றில் வாழும்புலம்பெயர்ந்தோரும்விழித்துக்கொண்டார்கள். எங்கே, இனப்பிரச்சினைக்கான தீர்வு தங்கள் பங்களிப்பு இல்லாமலே பேச்சு மூலம் முடிந்து விடுமோ என்ற கவலை அவர்களுக்கு.

### மண் குதிரை நம்பி

அதன் காரணமாகவே, போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்பு கூறல் பிரச்சினைகளைத் தூசு தட்டி எடுத்து, ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை அமைப்பின் முன் எடுத்துச்சென்றார்கள். அவர்களை ஆதரித்ததின் விளைவாக, கூட்டமைப்பும் குறிப்பாக சம்மந்தன் தலைமையும் அரசுடன் நடந்த பேச்சு மூலம் எதனையும் சாதிக்க முடியவில்லை. இன்று, அந்த பேச்சு நடந்து கிட்டதட்ட பதினைந்து ஆண்டுகள் முடிந்த பின்னர், போர் குற்றங்கள் குறித்தும் முடிவு எதுவும் இல்லை. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு திட்டம் எதுவும்கூட எட்டப்படவில்லை.

இதன் பின்னர், மைத்திரி– சிறிசேனா நல்லாட்சி அரசு நாடாளுமன்றத்தையே புதிய அரசமைப்பு சபையாகவும் மாற்றி, புதிய அரசமைப்புசட்டத்திற்கான முன்னெடுப்புகளையும் சரிவர செய்தது. அதன் பயனாக அல்லது விளைவாக, ரணில்– – சுமந்திரன் இணையாகச் சமர்ப்பித்த வழிநடத்தல் குழுவின் பரிந்துரைகளும் முன் வைக்கப்பட்டன.

ஏன், ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என்ற கேள்விக்கு பதிலாக, புதிதாக 'ஏக்கியம்' என்ற சொல்லாடலைகூட சுமந்திரன் முன்வைத்து அதற்கான பரப்புரையையும் தமிழர்கள் மத்தியில் முன்னெடுத்தார். என்ன, எதிர்பார்தது போல், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏற்பட்ட முட்டு–மோதல்களில் அந்த வழிநடத்தல் குழுவும் அதன் பரிந்துரைகளும் மட்டுமல்ல, அந்த அரசமைப்பு சபையே காணாமல் போய்விட்டது. இல்லாது இருந்தாலும், தென்னிலங்கைஅரசியல்தலைமைகள் மற்றும் அரச தலைமை, அந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருக்குமா, என்பது கேள்வியே. அவ்வாறாக மண் குதிரை நம்பி கூட்டமைப்பு ஆற்றில் இறங்கிய கதை அரங்கேறியது.

அடுத்து வந்த கோட்டபாய ராஜபக்ச ஆட்சியும் தேர்தல் காலத்தில் புதிய அரசமைப்பு என்று உறுதி அளித்து, அதனை செயலாக்குவதற்கு என்று முதலில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஒரு வழிநடத்தல் குழுவையும் நியமித்தது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு வரைவு அரசமைப்பு சட்டத்தை முடிவு செய்து, அதன் பின்னர் நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக அறிவிக்க இருப்பதாகவும் கோட்டாபய தெரிவித்தார்.

இந்தவழிமுறையில்தமிழர்கள்ஏற்றுக்கொள்ளும் தீர்வுமுன்னெடுக்கப்பட்டிருக்குமாஎன்பதுசந்தேகமே. ஆனால், அந்த முடிவுகள் எடுக்கப்படும் முன்னரே, கோட்டபாய பதவியை துறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அந்த தொடரில், ஜனாதிபதி அனுர குமார திசநாயக்காவின் அரசு, அவரது தேர்தல்வாக்குறுதியில் கூறிய, புதிய அரசமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். எதிர்வரும் நவம்பர் 14 அன்று நடைபெறும்நாடாளுமன்றத்தேர்தலைமுன்வைத்தும் அதில் தங்களுக்கு ஆதரவான முடிவை குறிப்பாக தமிழ் மக்களிடம் இருந்து எதிர்பார்த்தும் அரச தரப்பு அந்த வாக்குறுதியை தற்போது புதிப்பித்துள்ளது.

### பழைய குருடி

ஜனாதிபதி தேர்தலுக்கான அனுர குமாராவின் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் அறிக்கையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ரணில் – –சுமந்திரன் முயற்சியில் தோன்றிய பரிந்துரைகளின் அடிப்படையில்முன்னெடுக்கப்படும்என்றுகூறப்பட்டது. அதாவது, புதிய அரசமைப்புச் சபை, பழைய குருடி கதவை திறவடி என்று அடி முதல் தொடங்காது. மாறாக, இனப்பிரச்சினை உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும், முந்தைய பரிந்துரைகளின் அடிப்படையில் மாறுதல்கள் முன்னெடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ஆனால், தென்னிலங்கையில் தேர்தல் பரப்புரை சூடுபிடிக்கத் தொடங்கியதும், அனுர தரப்பு மிகவும் கவனமானவே இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து கருத்து கூறத் தொடங்கியுள்ளது. அவர்களது கவலை அவர்களுக்கு. முதலில் தமிழர் வாக்குகளை குறிவைத்து வடக்கிற்கும் கிழக்கிற்கும் அனுர தரப்பு அடுத்தடுத்துபயணங்களைமேற்கொண்டது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் கட்சிகளில் யாரும் அசைந்து கொடுக்காத காரணத்தால், அவர்கள் மீண்டும் தங்களது நிலையை தென்னிலங்கை சூழலுக்கு ஏற்றபடி மாற்றிக் கொண்டனர்.

அதாவது, பொலிஸ் மற்றும் காணி உரிமைகள் தவிர்த்து பதிமூன்றாவது சட்டத் திருத்தத்தின் கீழ் அதிகார பரவல் செயல்படுத்தப்படும் என்பதே அவர்களது புதிய கருத்தாக முன்வைக்கப்பட்டது. இதைத்தானே அன்றைய ஜனாதிபதியாக ரணிலும் கூறிவந்தார்! என்ன, இந்த வழியிலும் பேசாமல்,ரணில்– – சுமந்திரன் பரிந்துரைகளுக்கும் ஆதரவு தெரிவிக்காமல், சமஷ்டிக்கும் ஆதரவு தெரிவிக்காத சஜித் பிரேமதாசாவிற்கு, தமிழர் அரசியலுக்குமுன்னொருகாலத்தில்தலைமைத்துவம் நல்கிவந்த தமிழ் அரசு கட்சி பின் துணை நல்கியது.

### கௌரவ மோதல்

அன்றும் சரி, ஜனாதிபதித் தேர்தலில் அனுர வெற்றிபெற்ற பின்னரும் சரி, தமிழர் தரப்பு அரசியல் சுமந்திரன் மற்றும் சிறீதரன் போன்றோரின் தனிநபர் கௌரவ மோதலுக்கான களமாகவே மாறிவிட்டது. உண்மையைச் சொல்லப்போனால், சுமந்திரனை எதிர்த்து பல்வேறு வியூகங்களில் பல்வேறு தலைவர்கள் பல்வேறு அணிகளாக இப்போதும் செயலாற்றுகிறார்கள். எப்போதும் செயலாற்றுவார்கள்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# மாயப் போர்வை

4ம் பக்க தொடர்ச்சி...........

அவர்களை பொறுத்தவரையில், நாடாளுமன்றத் தேர்தலில் தங்களது ஆசனங்களைத் தக்கவைத்துக் கொள்கிறார்களோ இல்லையோ, சுமந்திரன் வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதில் கரிசனையாக இருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. சுமந்திரனும் சரி, தமிழர் அரசியல் பரப்பில், தனது அரசியல் ஆசானான காலம்சென்ற சம்மந்தனின் இடத்தைப் பிடிப்பதிலேயே குறியாக இருக்கிறார் என்றே சொல்லத் தோன்றுகிறது.

இனப்போர் காலத்தில் சம்மந்தன் மிதவாத தமிழர் அரசியல் கட்சிகளின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டது காலத்தின் கட்டாயம். அல்லது, விடுதலை புலிகள் அமைப்பின் கட்டாயத்தினாலும் செயலாக்கப்பட்டது. இனப்போர் முடிந்து, அந்த அமைப்பு காணாமல்போன பிறகும், அவரது தலைமையே தொடர்ந்தற்கு காரணம், நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இனப்பிரச்சினை குறித்த அவரது அறிவும் ஆளுமையும்தான்.

இன்னும் சொல்லப்போனால், 1987ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்த காலம் தொடங்கி, அமிர்தலிங்கம் தலைமையை தொடர்ந்து முன்னணி அரசியலில் பங்குபெற்றவர் என்ற பெருமையும் அவருடையது. என்றாலும், கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த தன்னை வடக்கு மாகாண மக்கள், முன்னர் ஒரு முறை நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடித்தார்கள் என்ற உண்மையை அவர் மறந்துவிடவில்லை. அதனால்தான், கடந்த 2013 வடக்கு மாகாண தேர்தலில்கூட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக, முதலமைச்சர் வேட்பாளராக அவர் களமிறங்கவில்லை.

### பல்வேறு கேள்விகள்

இப்போது, வட மாகாணத்தில் போட்டியிட்டு ஒன்றிரண்டு ஆசனங்களையாவது ஜேவிபி கைப்பற்ற வேண்டும் என்று கட்சி தலைமை முடிவு செய்துள்ளதாக அறிய முடிகிறது. அது கட்சியின் முடிவு இல்லையென்றால், அவ்வாறான முயற்சியை கட்சி மேற்கொள்ள வேண்டும் அல்லது மேற்கொள்ளும் போன்ற அறிவுரைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் யாழ்பாணத்தில் பஞ்சம் இல்லை.

இந்தப் பின்னணியில், முன்னாள் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஜனாதிபதி அனுரவை சந்தித்துப் பேசி உள்ளது, பல்வேறு விதமான கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பி உள்ளது. நல்லவேளை, அவர் கட்சி தாவி, ஜேவிபியி-ல் இணைகிறார் என்று மட்டும் யாரும் புரளி கிளப்பி விடவில்லை. கடந்த கிழமைகளில் அவர் பிறிதொரு தமிழ் கட்சிக்கு தலைமைத்துவம் நல்கப் போகிறார் என்பது வரை சமூக வலைதள வதந்திகள் கூறி வந்தன.

சிறீதரன் அனுரவை சந்தித்த பிறகு, தமிழர் பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் விவாதிப்பதற்காகவே அவரைச் சந்தித்து பேசினார் என்ற வகையில் செய்திகள் பரவி உள்ளன. சிறீதரனும் அதனை ஆமோரிப்பது போலவே அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால், சமூக வலைதளங்கள் அதனை அவ்வாறு நோக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து, சுமந்திரன் விடுத்த அறிக்கையில் முந்தைய ரணில் அரசிடமிருந்து 'பார் லைசென்ஸ்' பெற்றவர்களின் பட்டியலை வெளியிட வேண்டும் என்று மட்டும் கோரி உள்ளார். அவர் அவ்வாறு கூறியது, நாட்டில் அனைத்து அரசியல் தரப்பினருக்கும் பொருந்தும். ஆனால், அவர் குறிவைத்துள்ளது என்னவோ, ஒரு சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தலைவர்களையும்தான்.

இதனைத் தொடர்ந்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், ரணில் ஜனாதிபதியாவதற்கு வாக்களித்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு அவர்கள் பெற்றதாக கூறப்பட்ட கையூட்டு ஆகியவை குறித்தும், சமூக வலைதளங்கள் புதிப்பித்த செய்தி வெளியிட வாய்ப்புகள் உள்ளன.

### கேள்வி குறி

இன்று, தமிழ் அரசு கட்சியில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களை தேர்வு செய்யும் கமிட்டியில் சுமந்திரன் தரப்பினரின் கை ஓங்கி உள்ளது. கட்சியின் வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிப்பதற்கான அத்தாட்சிக் கடிதம் அளிக்க வேண்டிய மருத்துவர் சத்தியலிங்கமும் சுமந்திரன் அணியில் தொடர்வதாகவே தெரிகிறது. என்றாலும், கட்சி மற்றும் தேர்வு குழு தலைவர் என்ற முறையில் மாவை சேனாதிராஜா, அதிக எண்ணிக்கையில் புதிய உறுப்பினர்களை சேர்த்துள்ளதாகவும் சில செய்திகள் கூறுகின்றன.

மொத்தமுள்ள தமிழர் பகுதி ஆசனங்கள் 21. இதற்கு தமிழ் அரசு கட்சியின் தரப்பில் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டிய குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15. முதலில் இருந்து எண்ணிக்கையே அதீதம்தான். புதிய எண்ணிக்கையில் வேட்பாளர் தேர்ந்தெடுப்பு, விளங்கியது போங்கள்!

ஜனாதிபதி தேர்தலில், 'தமிழ் தேசியம்' பேசும் தரப்புகள் தமிழ் அரசு கட்சியின் கீழ் மிதவாதிகளாகவும் தற்போது உயிர்த்தெழுந்திருக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் கீழ் மிதவாதம் பேசும் தீவிரவாதிகளாகவும் களம் இறங்கின. இதில், இரண்டாவது வகையைச் சார்ந்தோர், பெரும்பாலும் முன்னாள் போராளிகள். அவர்கள், சிவில் சமூகத்தினருடன் கைகோர்த்து தொடங்கிய பொதுக் கட்டமைப்பு ஒரே தேர்தலில் காணாமல் போய்விட்டது.

அதனால் தானோ என்னவோ, மிதவாதியாகவே தன்னை காட்டிக்கொண்ட விக்னேஸ்வரனால், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பில், நாடாளுமன்ற தேர்தலில் இணைய முடியவில்லை என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆனால், மிதவாதிகளின் மிதவாத அமைப்பான தமிழ் அரசு கட்சியை அவர் ஏன் விட்டு விலகவேண்டும். அவரின் உள்ளே அன்றும் குழப்பம் இருந்தது. இப்போதும் அது தொடர்கிறது.

எனவேதான், நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சி தனியாகப் போட்டியிடும் என்று அவர் அறிவித்துள்ளார். தான் இனி தேர்தல் அரசியலில் இருந்து விடைபெற்று, இளைஞர்களுக்கு வழி விடுவதாகவும் அறிவித்துள்ளார். ஆனால், எப்போது, தமிழ் அரசு கட்சியுடனோ அல்லது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடனோ கைகோர்ப்பது இல்லை என்று விக்னேஸ்வரன் முடிவு செய்துவிட்டாரோ, அப்போதே அவரது கட்சியின் எதிர்காலம் சூன்யமாகி விட்டது.

இப்போது, ஓய்வு பெறவிரும்பும் தமிழ் அரசியல்வாதிகள் பட்டியலில் மாவை சேனாதிராசா இடம்பெறப்போகிறாரா, என்ற கேள்வி எழுகிறது. உண்மை என்னவோ, அவர் போட்டியிட்டால் வெற்றி கேள்விகுறி ஆகிவிடும். கடந்த முறை கட்சிக்கும் அவரது தலைமைக்கும் இப்போதைக்கு விட மக்கள் ஆதரவு அதிகமாக இருந்தபோதே அவர் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியை தழுவினார்.

### அவசியமான ஏணி

தற்போது தமிழ் அரசு கட்சி அரசியலில் குழப்பம் நிலவுகிறது. சேனாதிராசா தலைமை மீதும் அதீத அதிருப்தி நிலவுகிறது. அதனைத் தொட்டுப் பார்க்கலாம். தொடாமலேயும் உணரலாம். ஆனால் இன்று அவர் நாடாளுமன்ற பதவி தேவையில்லை என்று கூறிவிட்டு பின்னர் வட மாகாண முதலமைச்சர் என்று தன்னை முன்னிறுத்திக்கொள்ள முயலலாம். அல்லது, தற்போதே நாடாளுமன்றத்தில் தேசிய

4ம் பக்க தொடர்ச்சி...........



காலைக்கதிர் Kalaikkathir

# ஊழல் கலாசாரம் தொடர்ந்து நீடித்தால் ஜப்பான் ஒருபோதும் முதலீடு செய்யாது

## அந்நாட்டு தூதுவர் கடும் எச்சரிக்கை



இலங்கையில் ஊழல் கலாசாரம் நீடித்தால் ஜப்பானின் முதலீடுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லைஎன இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹடேகி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையி;ல் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

முதலில்வெளிநாட்டுஅழுத்தங்களின்மூலம்கிடைக்ககூடிய சாதகதன்மையை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் இல்லாமல் ஜப்பான் பல விடயங்களை சாதித்திருக்க முடியாது.

ஜப்பானின் சீர்திருத்த தலைவர்கள் சர்வதேச அழுத்தத்தின் காரணமாக புத்திசாலித்தனமான முடிவுகளை எடுத்தார்கள்.

இலங்கை இன்று சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையின் கீழ் பொருளாதார அமைப்பு முறையில் சீர்திருத்தங்களைமேற்கொள்ளமுயல்கின்றது.வரிச்சீர்திருத்தம், மின்சார சீர்திருத்தம்,போன்றவை சவாலானவை மக்களின் ஆதரவற்றவையாக காணப்படலாம்.

எனினும் இவ்வாறான வெளிநாட்டு அழுத்தங்களை நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்காக பயன்படுத்துவதை பலவீனமாக கருதக்கூடாது,மாறாக தலைவர்களின் புத்திசாலித்தனத்திற்கான சான்றாக கருதவேண்டும்.

இந்தியா1991இல்நிதிநெருக்கடியைஎதிர்கொண்டது,சர்வதேச நாணயநிதியம் உலக வங்கியின் ஆலோசனைகளுடன் கட்டமைப்பு சீர்திருத்தத்தை முன்னெடுத்தது.

அன்று முன்னெடுக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் இந்தியாவை இன்று மிகவேகமாக வளர்;ச்சியடையும் பொருளாதாரமாக மாற்றியுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கைகள் புத்திசாலித்தனமான தொடர்ச்சியான பொருளாதார கொள்கைகளை பின்பற்றுவது குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பிற்கான ஆதரவாகசர்வதேசசமூகம்கருதுகின்றது.

2022 இல் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்ததை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்ட 11 ஜப்பான் நாணய கடன் திட்டங்களை ஜப்பான் சமீபத்தில் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

உலகின் வேறு எந்த நாட்டிற்கும் முதல் ஜப்பான் இதனை செய்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்துடனும் இலங்கைக்கு கடன்வழங்கிய ஏனைய நாடுகளுடனும் இலங்கை செய்துகொண்ட உத்தியோகபூர்வ உடன்படிக்கையின் அடிப்படையிலேயே ஜப்பான் இந்த திட்டங்களை மீள ஆரம்பித்துள்ளது என்பதை கருத்தில்கொள்வது அவசியம்.

ஜப்பானின் அனுபவத்தில் இரண்டாவது மிக முக்கியமான விடயம் என நான் கருதுவது போட்டித்தன்மை மிக்க தொழில்துறையை கட்டியெழுப்புவது.

இலங்கை தற்போது முக்கியமான திருப்புமுனையில் உள்ளது.

பொருளாதார நெருக்கடியை வளர்;ச்சியை நோக்கி மாறுவதற்கான வாய்ப்பாக பயன்படுத்தலாம்.

போட்டித்தன்மை மிக்க தொழில்துறையை உருவாக்குவதற்கானதொழில்கொள்கையைஉருவாக்குவது அவசியம் என்பதை பொருளாதார அதிசயம் குறித்த ஜப்பானின் அனுபவம் வெளிப்படுத்துகின்றது.

சர்வதேசநாணயநிதியத்தின்திட்டத்தின்கீழ்இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது.பணவீக்கம் ஒன்றை இலக்கத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது,கடந்த வருடத்தின் நான்காவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி சாதகமானதாக காணப்பட்டது.

குறுகிய காலத்திற்குள் பொருளாதார ஸ்திரதன்மையை ஏற்படுத்துவதற்குஅரசாங்கமும்பொதுமக்களும்மேற்கொண்ட முயற்சிகளை நான் பாராட்டுகின்றேன்.

எனினும் இலங்கைஇறக்குமதி கட்டுப்பாட்டினை அகற்றியதும்,அந்நிய செலாவணி பற்றாக்குறை மீண்டும் உருவாகலாம்.

இதன் காரணமாகஸ்திரதன்மையைஏற்படுத்தியபின்னர் ,நாட்டில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தும்,நாட்டிற்கு அந்நிய செலாவணியை உழைக்கும் போட்டித்தன்மை மிக்க தொழில்துறையை கட்டியெழுப்புவது அவசியம்.

தொழில்துறையை கட்டியெழுப்புவதில் இலங்கை ஜப்பானின் தொழில்துறை கொள்கைகள் மூலம் பாடம் கற்றுக்கொள்ளலாம்.

நஷ்டத்தில் இயங்கும் தொழில்துறையை அரசாங்க பணத்தை பயன்படுத்தி பாதுகாக்காமல் இருப்பது அவசியம்.

நான் சுட்டிக்காட்ட விரும்புகின்ற மூன்றாவது விடயம் ஊழலிற்கு முடிவு காண்பது.

இலங்கைக்கு மிகவும் அவசியமானது என்பதால் நான் ஊழல் பிரச்சினை குறித்து கருத்து தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஊழலை ஒழிப்பது குறித்து தீவிர அர்ப்பணிப்புள்ள தலைவரை இலங்கை மக்கள் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளதால் இலங்கைக்கு நீண்டகாலமாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ள இந்த தீமைக்கு தீர்வை காண்பதற்கான சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

நான் இங்கு பணியாற்ற வந்த பின்னர் இலங்கையின் அரசியலை உன்னி;ப்பாக அவதானித்தவன் என்ற அடிப்படையில் ஊழல் தொடர்பான இரண்டு விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கை மக்கள் தங்கள் தலைவர்களை வெறுப்பதற்கு ஊழல் ஒரு காரணமாக உள்ளது.மேலும் தலைவர்கள் ஊழல்மிகுந்தவர்களாகயிருக்கும் போது பொறுப்புணர்வுள்ளவர்களாக தாங்கள் இருக்கவேண்டும் என மக்கள் சிந்திக்கும் நிலையை அது ஏற்படுத்தாது.தலைவர்கள் ஊழல்வாதிகளாக காணப்படும் போது வரி செலுத்தவேண்டியவர்கள் வரிசெலுத்துவதை தவிர்க்க முயலக்கூடும்.

இரண்டாவது இலங்கை வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முயலும் போது இது பாதகமான விதத்தில் தாக்கம்; செலுத்தும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெறுவதற்கு வெளிப்படையான எதிர்வுகூறக்கூடிய வர்த்தக சூழல் அவசியம்.

ஜப்பானிய நிறுவனங்கள் தற்போது தங்கள் கடப்பாடுகளை பின்பற்றுவதில் மிகவும் இறுக்கமாக காணப்படுகின்றன,இதன் காரணமாக அவர்கள் இலஞ்சம் பெறுவதில்லை.

இலங்கையில் ஊழல் கலாச்சாரம் நீடித்தால் ஜப்பானின் முதலீடுகள் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே தெரிவிப்பேன்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கா அதிகளவு ஜப்பானிய முதலீடு கிடைப்பதை விரும்புவதால் நான் இதனை தெரிவிக்கின்றேன். - என்றார்.(05)

# கசிப்புப் போத்தலுடன் பாடசாலை சென்ற மாணவன்

சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதற்காக கசிப்பு போத்தலுடன் பாடசாலைக்குச் சென்ற மாணவன் ஒருவன் செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக திஸ்ஸமஹாராமபொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பாடசாலையின் அதிபர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இந்த மாணவன் கசிப்பு போத்தலுடன் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளான்.

இந்த மாணவன் 6 ஆம் வகுப்பில் கல்வி கற்று வருகிறான்.

மாணவனின் உறவினர் ஒருவர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாகவும்நண்பர்களுடன் இணைந்து சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதற்காக இரகசியமாக கசிப்பு போத்தலைப் பாடசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் மாணவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக கூறப்படும் மாணவனின் 19 வயதுடைய உறவினரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிக விசாரணைகளில் திஸ்ஸ மஹாராம பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# வெள்ளவத்தை கடற்கரையில் ஒதுங்கிய ஆணின் சடலம்



கொழும்பு,வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரை பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை எனபொலிஸார்தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 45 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் 05 அடி 04 அங்குலம் உயரமுடையவர் எனபொலிஸார்தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# வவுனியா - ஈச்சங்குளத்தில் காட்டு யானைகளால் பெருந்தொகை தென்னை மரங்கள் முற்றாக அழிவு





வவுனியா ஈச்சங்குளத்தில் காட்டு யானைகளால் ஒரே இரவில் பெருந்தொகையான தென்னை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

குறித்த அனர்த்தமானது புதன்கிழமை இரவுஇடம்பெற்றுள்ளது.

நீர்தட்டுப்பாட்டு காலத்திலும்கஸ்டப்பட்டு தென்னையை பயிருட்டு வளர்ந்திருந்த நிலையிலே யானைகளால்இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளதுடன், தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வரவிருக்கும் பெரும்போக விவசாயத்தை யானையின் தாக்கத்திற்கு மத்தியில் எவ்வாறு செய்வது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே இதற்கான சரியான தீர்வை தமக்கு பெற்றுத்தருமாறு விவசாயிகள்கோரிக்கை விடுக்கின்றனர்.(05)

# மாயப் போர்வை

4ம் பக்க தொடர்ச்சி...........

பட்டியலில் தன் பெயரை நுழைத்து விடலாம்.

விக்கினேஸ்வரன் மற்றும் சேனாதிராசா தவிர்த்துள்ள தோல்வியுற்ற தலைவர்களை கருத்தில் எடுத்துக் கொண்டால், சுரேஷ் பிரேமசந்திரன், ஶ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோர் அந்த பட்டியலில் அடங்குவார்கள். இவர்கள் அனைவருமே ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரான அரியநேத்திரனுக்கு ஆதரவாக முழு மூச்சுடன் பரப்புரை செய்தது ஒரு தமிழர், நாட்டின் ஜனாதிபதியாகி விடுவார் என்ற நம்பிக்கையில் அல்ல. மாறாக, புதிய தலைமுறையினருடன் அப்போது கிடைத்த அறிமுகத்தை வைத்து, நாடாளுமன்ற தேர்தலில் ஒரு கை பார்த்துவிடுவது என்பதுதான்.

இவர்களுக்கு மட்டுமாவது, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி அவசியமான ஓர் ஏணி அல்லது வாகனம். இந்தக் கூட்டணியின் முக்கிய தலைவர்களான புளொட் சித்தார்தன் மற்றும் ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் விரும்பினாலும், தமிழ் அரசுக் கட்சியுடன் சோந்து செயல்பட இவர்கள் அனுமதிக்கப்போவதில்லை. காராணம், அவ்வாறான ஒரு கூட்டணியில், தங்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இருக்காது என்பது அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

தங்களுக்கு வேண்டுமென்றால், சுமந்திரனின் ஆதிக்கம் என்றெல்லாம் மற்றவர்களை உசுப்பேற்றி அரசியல் செய்ய இவர்கள் தயங்க மாட்டார்கள். ஏன், சுமந்திரன் அரசியலில் நுழைந்த காலம் தொட்டு, அவருக்கெதிராக சுவரொட்டிகளும் பதாகைகளும் யாழ்பாணத்தில் திடீர்திடீரென தோன்றி வந்தததை பலரும் மறந்திருக்க முடியாது.

### காலத்தின் கட்டாயம்

அனைத்து தமிழ் கட்சிகளும் ஒருங்கிணைந்து தேர்தல்களை சந்திப்பது காலத்தின் கட்டாயம். ஆனால், கடந்த காலங்களில் காலம் வழங்கிய அறிவுரைகளை தமிழர் தலைமைகள் எப்போதுமே ஏற்றுக் கொண்டதில்லை. இதில், பிரபாகரனும் அடக்கம். அதற்கான பயன்களை அவர்களை நம்பி மோசம் போன மக்களே இன்னமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதில், 'தமிழ் தேசியம்' என்ற மாய போர்வையை தங்கள் மீது போர்த்திக்கொண்டு அரசியல் செய்யும் சில -பலரின் சில்மிஷங்களும் சின்னத்தனங்களும் தாங்க முடியாது. விடுதலை புலிகள் அமைப்பின் வாரிசுகளாகத் தங்களை வரிந்துகொண்டு, இவர்கள் செய்யும் அரசியல் அடாவடித்தனம் தான் தமிழர்களின் எதிர்காலத்தை இன்னமும் கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கிறது.

இவர்கள் அடுத்தவர்களுக்கு இன்னமும் 'துரோகி' முத்திரையை நேரடியாகவோ மறைமுகமாகவோ குத்தி தங்களை தாங்களே ஆனந்தப்படுத்திக் கொள்கின்றனர். உண்மையில் இவர்கள்தான் தமிழ் இனத்தின் துரோகிகள். இப்போதும், எப்போதும்.

# அமெரிக்க தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பாதுகாப்புச் செயலாளரைச் சந்தித்தார்



இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்ணல் அந்தனி நெல்சன் பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவை (ஓய்வு) கோட்டை ஶ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்பு தலைமையகவளாகத்தில் புதன்கிழமை சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது பாதுகாப்பு செயலாளர் தூயகொந்தா, அமெரிக்க பாதுகாப்புஆலோசகருடன் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், இந்த சந்திப்பை குறிக்கும் வகையில் அவருடன் நினைவுச் சின்னாங்களையும் பரிமாறிக்கொண்டார்.

அமெரிக்க தூதரகத்தின் கடற்படை ஆலோசகர் லெப்டினன்ட் கொமாண்டர் ஜெசிகாடிமொன்ட், உதவி பாதுகாப்பு ஆலோசகர் செத் நெவின்ஸ், பாதுகாப்பு ஒத்துழைப்பு அலுவலகத்தின் பிரதானி லெப்டினன்ட் கொமாண்டர் ஷான் ஜின் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (05)

# மனைவியை தாக்கி காயப்படுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் கைதானார்

மனைவியைத்தாக்கிகாயப்படுத்தியதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த உடமலுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த மனைவியும் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது - சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் திங்கட்கிழமை மதுபோதையில் தனது மாமனாரின் வீட்டுக்குச்சென்றுள்ள நிலையில், வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை உடைத்துச் சேதப்படுத்தி மனைவியை பலமாகத் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

பின்னர், காயமடைந்த மனைவி இது தொடர்பில் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அநுராதபுரம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

## சங்கு சின்னம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனோதானோஎன்பதுபோல்அமைந்திருந்தது.

ஆகவே, தமிழ்மக்களின்ஐக்கியம்குறித்து பேசுகின்ற தமிழ் அரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் எமது கூட்டணியில் இணைந்து செயற்பட விரும்புகின்ற பட்சத்தில் எப்போதும் வந்து இணைந்துகொள்ளலாம்.

தமிழ்அரசுக்கட்சியைப்பொறுத்தவரையில் ஒருமித்த தீர்மானத்தை எடுக்கக்கூடிய நிலைமையில்அவர்கள்இல்லை.அவர்களுக்கு இடையே உள்முரண்பாடு அதிகமாக ஏற்பட்டுள்ளது. இதனாலேயே அந்தக் கட்சி இப்போது நீதிமன்றமும் சென்றுள்ளது. அவர்களால் ஒருமித்து திட்டவட்டமான தீர்மானமொன்றைஎடுக்கமுடியாது. இப்போது இருக்கின்றநிலைமையைப்பார்த்தால்தங்கள் கட்சிக்குள்ளேயே ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் தத்தளிக்கின்றனர்.

இவ்வாறுஒருகட்சிக்குள்ளேயேசுமுகமான அமைதியான சூழலை ஏற்படுத்தி ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க முடியாதவர்கள் எவ்வாறு பொது இணக்கத்தை ஏற்படுத்த முடியும்.? இதனால் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு இந்தத் தேர்தலில் போட்டியிட ஆசனம் வழங்கப்படுமா என்பது கூட சந்தேகம் நிலவுகின்றது. ஆகவே, தமது கட்சிக்குள்ளேயே உள்ளக முரண்பாடுகளைத் தீர்த்து முதலில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கட்டும்.

அதன்பின்னர்ஐக்கியம்குறித்துபேசலாம். கூட்டணி குறித்தும் பேசலாம்.எனவே, தமிழரசுக் கட்சியினர் தமது கட்சிக்குள்ளேயே பல பிரிவுகளாக இல்லாமல் ஓரணியாக ஒருமித்த தீர்மானத்தை எடுத்து அதனை உளப்பூர்வமாக முதலில் அறிவிக்கட்டும். அதன் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் - என்றார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் அவர்கள் இருவரும் மௌபிம ஜனதாக் கட்சியில் இணைந்தனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் சென்ற இந்த இரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்களில் ராஜிகா விக்கிரமசிங்க மௌபிம ஜனதாக் கட்சியின் கேகாலை மாவட்ட மற்றும் தெதிகம அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

அதேநேரம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேனா, கட்சியின்பொலன்னறுவைமாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பொலன்னறுவை மாவட்ட இணைப்பாளராக சமிந்து குமாரசிங்கவும், கண்டி மற்றும் உடுநுவர மாவட்ட இணைப்பாளராக தக்சில பிரேமசிறியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி ஹேவாஹெட்ட அமைப்பாளராக சஞ்சீவ சுரவீரவும் கண்டி யட்டிநுவர அமைப்பாளராக தக்சில செனவிரத்னவும் ரத்கம அமைப்பாளராக துசித திலங்க ஜயசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நாடாளுமன்றத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிசபைத்தேர்தலைவிரைவாக நடத்துவதற்கானஉத்தரவைஉயர்நீதிமன்றம் விடுத்துள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக் குழு இந்த அறிவிப்பை விடுப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, தெரிவித்துள்ளார்.

அதேவேளை 2023 உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான அறிவிப்பு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவரின் கையொப்பத்துடன் வெளியிட்டுள்ளது.

2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் தொடர்புடைய அடிப்படை உரிமை மனு தொடர்பில் 2024 ஒகஸ்ட் 22 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை தேர்தல் ஆணைக்குழு கவனத்திற் கொண்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தினத்தில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவுக்கு இணங்க சட்டபூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ள வகையில் தேர்தலைநடத்துவதற்கானநடவடிக்கைகளை கவனத்திற் கொண்டு பாராளுமன்ற தேர்தல் நிறைவு பெற்றதும் உடனடியாகவே ஆணைக்குழு மிக விரைவாக உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு திகதியை வழங்க நடவடிக்கை எடுக்கும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பாராளுமன்ற தேர்தலுக்கு இடைப்பட்ட காலத்தில் இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட வகையில் ஒக்டோபர் 26 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# பிணைமுறி மோசடி வழக்கிலிருந்து ரணில் ஏற்கனவே விடுவிக்கப்பட்டார்

## அவரது முன்னாள் ஊடகப் பணிப்பாளர் விளக்க அறிக்கை

பிணைமுறி மோசடி வழக்கிலிருந்து ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே விடுவிக்கப்பட்டுவிட்டார் என்று முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் தனுஷ்க ராமநாயக்க அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படலாம் என்று அறிவித்துள்ளமை குறித்துப் பதிலளித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பிணை முறி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக ஆராய்வதற்காக பொதுமுயற்சியாண்மைக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவினை நியமித்தார். 2017ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதியரசர்கள், ஓய்வு பெற்ற கணக்காளர் நாயகம் ஆகியோர் விசாரணைகளை நடத்தியிருந்தார்கள். குறித்த ஆணைக்குழுவின் முன்னிலையில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பெரும்பாலானோர் சாட்சியமளித்தார்கள்.

அதன் பின்னர் பிணைமுறி விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க தொடர்புபடவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். இரண்டாம் நிலைக் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக சில கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றபோதிலும் குறித்த நிறுவனத்தின் 12 பில்லியன் ரூபாவை மத்திய வங்கி தக்கவைத்துள்ளது. அதனால் இலங்கை அரசிற்கு எவ்விதமான நிதி இழப்பும் ஏற்படவில்லை.

எவ்வாறாயினும், சட்டமா அதிபர் 10 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த நிலையில் அது மூவர் அடங்கிய நீதிபதிகளின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் அந்தப் பத்துப்பேரும் விடுவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றில் சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு 2025 ஜனவரியில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மூலக் குற்றப்பத்திரத்தில் 59 பேர் பட்டியிலிடப்பட்டுள்ள போதிலும் ரணில் விக்கிரமசிங்க சாட்சியமளிப்பதற்கு கூட ஒருசாட்சியாகவேனும் பெயரிடப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'பார்' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துள்ளமை குறித்த சர்ச்சை காணப்படும் நிலையில் இந்த விடயத்தில் வெளிப்படைத் தன்மை காணப்படவேண்டும் என்று சுமந்திரன் தெரிவித்தார். கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

மதுபானசாலைகளைத் திறப்பதற்கு பரிந்துரைசெய்தநபர்களின்பெயர்விபரங்களை ஆளும்தரப்பு வெளியிடவேண்டும் என சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளவிய ரீதியில் மதுபானசாலைகள் குறித்தபரந்துபட்டவிவகாரம்காணப்படுகின்றது, இவற்றிற்குஅனுமதிப்பத்திரத்தைவழங்குமாறு பரிந்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் யார் என்பது மக்களிற்கு தெரியவேண்டும்.

எதிர்வரும் தேர்தலிற்கு முன்னர் இதனை பகிரங்கப்படுத்தவேண்டும், இதன் மூலம் இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளவர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுவதை உறுதி செய்யலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மதுபானசாலைகள்அதிகரிப்புஎன்பதுசமூகப் பிரச்சினை, இது இளம்தலைமுறையினருக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும், மதுபா னசாலைகளை விவரிப்பதில் நேரடியாகத் தொடர்புபட்ட அரசியல்வாதிகளை மக்கள் முன் அம்பலப்படுத்தவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அனைத்துத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தவர்களுக்கு இன்னும் சில நாட்களில் உரிய பதில் கிடைக்கும் என்று ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.

கண்டியில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளைகுற்றப்புலனாய்வுப்பிரிவினர் முன்னெடுப்பார்கள். அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவும் அது தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுக்கும். அதற்காக முழு அரச கட்டமைப்பும் முறையாகச் செயற்படும்.

விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அரச கட்டமைப்பில் காணப்பட்ட அனைத்து தடைகளையும் நீக்கியுள்ளோம். அனைத்து அதிகாரிகளையும்புதிததாகநியமித்துள்ளோம்.

ஊழல் மோசடிகள் சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமக்குச் சவால் விடுத்தவர்களுக்கு இன்னும் சில நாட்களில் உரிய பதில் கிடைக்கும். இலங்கையின் அரசியலில் இதுவரையில் மக்கள் பிரதிநிதிகள் என்ற பிரிவு காணப்படவில்லை. தற்போது மூன்று பிரதிநிதிகள் காணப்படுகின்றார்கள்.

அந்த மூன்று பேரே தற்போது நாட்டை நிர்வகிக்கின்றார்கள். அடுத்த பொதுத் தேர்தலின் பின்னரேயே புதிய அமைச்சரவை உருவாக்கப்படும் 25 அமைச்சர்கள், 25 பிரதியமைச்சர்களைக் கொண்டதாக அது இருக்கும்.

அதற்கு இடையில் மக்கள் கோருகின்ற விடயங்களில் ஒருசிலவற்றை நிறைவேற்று வதற்கு நாம் முயற்சிக்கின்றோம் - என்றார்.

## நாடாளுமன்றத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிதலைவர்கள்நேற்றுச்செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி எதிர்வரும் பொதுத்தேர்தலில் கணிசமான வெற்றியைப் பெறவுள்ளது. எம்முடன் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் ஒருங்கிணைந்துள்ளனர்.

அதனைவிடவும், கட்சியில் பல்வேறு தரப்பினரும் இணைந்து வருகின்றார்கள். அந்த வகையில் பாராளுமன்றத் தேர்தலில் பெருவெற்றிபெறுவதை இலக்காகக் கொண்டு நாம் நடவடிக்கைகளை முன்னெடுக் கவுள்ளோம்.

எம்மைப்பொறுத்தவரையில் நாட்டின் எதிர்காலத்திற்காக தேசிய மக்கள் சக்தியின் பொருத்தமான திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம் என்றார்.

## நீதிவானுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை விமர்சித்துநீதிவான்திலினகமகேவைஇதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் கொல்வோம் என மிரட்டல் கடிதங்களை அனுப்பியமை தொடர்பான விசாரணைகளின் பின்னர் நீதிவானுக்கானபாதுகாப்புஅதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

220இலட்சம்மக்களின்பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதற்கு நாம் பலமாக இருக்கவேண்டும். கபட, பொறாமை, வெறுப்பு அரசியல் முறைமையில் இருந்து விலகி நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்கும் வேலைத்திட்டத்திற்குச் செல்லவேண்டும்.

இளைஞர்களுக்கு பக்கபலத்தை வழங்கி, நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களை புதிய தொழில்முனைவோராக உருவாக்க வேண்டும். பயன்படுத்தப்படவேண்டும். பிரச்சினைகளுக்கு பதில்களும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும்.

இலட்சக்கணக்கானோர் இங்கு வேலை வாய்ப்புகள் இல்லாது இருக்கும் போது, அதிக முதலீடுகளை இங்கு மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு முதலீட்டாளர்களை, சர்வதேச சமூகத்தினரைக் கேட்டுக்கொள்கிறோம்.

அந்நிய நேரடி முதலீடு நாட்டிற்கு வருவதை விரும்புகிறோம். நாட்டில் தகவல் தொழிநுட்ப பூங்காக்களை உருவாக்கி தகவல் தொழிநுட்ப ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டும். உலகிற்கு ஏற்ற கல்வியும் ஸ்மார்ட் கல்வியும் மிக்க குடிமக்களும் உருவாக்கப்பட வேண்டும்

ஜனாதிபதித்தேர்தல்முடிவடைந்தகையோடு பொதுத்தேர்தல்வரும்போதுபொதுத்தேர்தலின் ஊடாக நாட்டு மக்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தீர்க்கப்படவேண்டும். அது வெறுமனே பேச்சுக்குள் மட்டுப்படுத்தப்படாமல் களத்தில் யதார்த்தமான ஒன்றாக அமைந்து காணப்படவேண்டும். நாட்டுக்கு வழங்கப்பட வேண்டிய உகந்த தீர்வுகள் மக்கள் சார்பான தீர்வுகளாக அமைய வேண்டும். மேலும், உள்ளோர் இல்லாதோர் இடைவெளியைப் போக்கக்கூடிய, சொந்தக் காலில் நிற்கக்கூடிய பெருமைக்குரியதலைமுறையைஉருவாக்கி, அனைத்து மக்களையும் உள்வாங்கிய அபிவிருத்தி யுகத்தை உருவாக்கித் தருவோம். இது ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்காகும் என்றார்.

## வரி நிவாரணங்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் நெருக்கடிகளை சந்தித்து வரும் மக்களிற்கு வரி நிவாரணங்கள் அவசியமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி சர்வதேச நாணயநிதியத்தின் அதிகாரிகளுடனான சந்திப்பில் ஆராய்ந்தார் என்று ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் நோக்கங்கள் குறித்த கொள்கையளவிலான ஆளும்தரப்பின் பரந்துபட்ட உடன்பாட்டை மீள வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி இந்த நோக்கங்களை மக்களின் சுமைகளை குறைக்கும் மாற்றுவழிகள் ஊடாக அடையவேண்டிய தேவையையும் வலியுறுத்தினார்.

## கெஹலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றநீதிபதிசுஜீவநிஸங்கமுன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நீதிமன்றத்தில் இருந்தார்.

இந்த வழக்கை ஏற்கனவே திட்டமிட்டபடி நவம்பர் 29 விசாரிக்க மேல் நீதிமன்ற நீதிபதி

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## கெஹலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டார்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி ஹீன்கெந்த ஆகியோருக்கு எதிராக 2,000 கோடி ரூபாவை அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இந்த ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது

## அபிவிருத்தித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்கவை சந்தித்த போதே இந்த உடன்பாட்டை வெளியிட்டனர்.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கொரிய எக்ஸிம் வங்கி வழங்கிய நிதியுதவி 2022, -2024 ஆம் ஆண்டுகளில் இடைநிறுத்தப்பட்டது. அந்த அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவதற்கு சலுகைக் கடன் உதவி வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக கொரிய எக்ஸிம் வங்கியின் பிரதிநிதிகள் ஜனாதிபதியின் செயலாளரிடம் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் இலங்கை அரசின் பொருளாதார ரீதியில் பயனுள்ள வேலைத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு தாங்கள் எதிர்பார்ப்பதாக கொரிய எக்ஸிம் வங்கி பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

கொரிய எக்ஸிம் வங்கியின் பணிப்பாளர் வொன்சுக் ஹா, பிரதிப் பணிப்பாளர் ஹனுய் ஹன், திட்ட முகாமையாளர் நளின் ஜயதுங்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரொஷான் கமகேயும் இதில் இணைந்து கொண்டார்.

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிபாரிசுகளின் பெயரில் வழங்கப்பட்டுள்ளன என்கிற குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில் அது பற்றிய விவரங்களை முழுமையாக வெளியிடுமாறு சுமந்திரன் வலியுறுத்தினார்.

அந்த அனுமதிகள் சிலரால் தமது ஆதாயத்திற்காக விற்கப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. எனவே யாரின் பெயரால் அவை வழங்கப்பட்டன யாருக்கு வழங்கப்பட்டன என்கிற விவரங்களை வெளியிடுமாறும் சுமந்திரன் கேட்டுக்கொண்டார்.

காலம் தாமதிக்க, தாமதிக்க இந்த விடயத்தில் தற்போதைய அரசுத் தரப்புக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் மக்களுக்கு வலுக்கும் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதற்கு, அனுமதி யாருடைய பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம்தான் எம்மிடம் முழுமையாக உள்ளது, எந்த அரசியல்வாதியின் சிபாரிசில் அவை வழங்கப்பட்டன என்பதைபற்றிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்காக புலனாய்வு அடிப்படையில் தேடப்படுகின்றன என்று ஜனாதிபதி பதிலளித்திருக்கின்றார்.

பெரும்பாலான பெர்மிட்டுகள் வடக்கு பகுதிக்குவழங்கப்பட்டிருப்பதால்அதுயாருடைய பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதை உத்தியோகபூர்வமாக வெளியிடுங்கள், அதை யார் சிபாரிசு செய்தார்கள் என்பதை எமது மக்கள் கண்டுபிடிப்பார்கள் என்று சுமந்திரனும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் தமிழர்களின் அபகரிக்கப்பட்ட-ஆக்கிரமிக்கப்பட்ட - காணிகளை விடுவித்தல் ஆகியவற்றில் அரசு உறுதியாக இருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு இந்த விடயங்கள் முடிவுக்கு வரும் வகையில் தீர்வு காணப்படும் என்று சுமந்திரனிடம் உறுதி அளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி. கிழக்கில் மேய்ச்சல் தரைப் பிரச்சினை, கிழக்கு மாகாண பூர்வீக நிலங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் சூறையாடப்படுவது தொடர்பான விவகாரம், கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் சம்பந்தமானசர்ச்சைபோன்றவற்றுக்கெல்லாம் புதிய அரசு நிறுவப்பட்டதுடன் தீர்வும் காணப்படும் என ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது உறுதி அளித்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## கருத்துச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் 15 பேர் கூட்டாக இணைந்து ஓர் அறிக்கையைவிட்டிருந்தனர். இதனைஅடுத்து அவர்களைத் துரோகிகளாகச் சித்தரிக்கும் வகையில் பல்கலைக்கழக வளாகத்திற்குள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஆசிரியர்களின் கருத்துக்களுக்கு எதிரான இந்த நடவடிக்கை தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆரோக்கியமான விவாதங்களிற்கும் கருத்துப் பரிமாறல்களிற்குமான களமாக பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன. கருத்துச் சுதந்திரம் கல்விச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். பல்கலைக்கழக சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளவல்ல அறிவு முதிர்சியினைக் கொண்டிருப்பர்.

அண்மையில் 15 பல்கலைக்கழக ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிற்கு எதிராக யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டி முதலான சில சம்பவங்கள் கருத்து சுந்திரத்திற்கான வெளியினை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளின் பின்னால் உள்ளவர்களின் அநாகரீகமான நடவடிக்கைகளால் அவர்கள் தங்களை மாத்திரமன்றி இப் பல்கலைக்கழகத்தினையும் இழிவுபடுத் துகின்றனர். யாழ். பல்கலைக்கழகத்திற்கு களங்கத்தினை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான அநாகரீகமான செயற்பாட்டினை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது. இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது - என்றுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# இயலுமான சகல தேசிய, சர்வதேசப் பொறிமுறைகளின் ஊடாக நீதிக்கான அழுத்தத்தை வழங்குவது அவசியம்

## சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்போன்றசர்வதேசக்கட்டமைப்புக்களில்முழுமையாகத் தங்கியிருப்பதன் விளைவாக முகங்கொடுக்க வேண்டியிருக்கும்மட்டுப்பாடுகள்குறித்துசுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச குற்றவியல் சட்டத்தரணி அலைன் வேனர், இது தமிழ் மக்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதில் தாமதத்தை ஏற்படுத்தக்கூடும் எனக் கரிசனை வெளியிட்டுள்ளார்.

கனேடிய தமிழர்கள் தேசிய பேரவையானது சர்வதேச நாடுகளில் இயங்கிவரும் மேலும் சில புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் இணைந்து 'இலங்கையில் சர்வதேச பொறுப்புக்கூறலைமேம்படுத்தல்' எனும்தலைப்பில்ஜெனிவா ஊடக அமையத்தில் நடாத்திய கலந்துரையாடலின்போதே மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டன.

இக்கலந்துரையாடலில்சர்வதேசகுற்றவியல்சட்டத்தரணி அலைன் வேனர், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணி சன் கிம் மற்றும் இலங்கையைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும்தமிழ் சிவில் சமூகப்பேரவையின் உறுப்பினர் ஆனந்தராஜ் நடராஜா ஆகியோர் பங்கேற்று கருத்து வெளியிட்டனர்.

அதன்படி கலந்துரையாடலின் தொடக்கத்தில் உரையாற்றிய கனேடிய தமிழர்கள் தேசிய பேரவையின் நிறைவேற்றுப்பணிப்பாளர்ருக்ஷாசிவானந்தன், இலங்கையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு சர்வதேச பொறுப்புக்கூறல் செயன்முறையை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமாகின்றது எனச் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியதும், போர்க்குற்றங்களிலும், மனிதகுலத்துக்குஎதிரானமீறல்களிலும் ஈடுபட்டவர்களைப் பொறுப்புக்கூறச்செய்யக்கூடியதுமான சுதந்திரமானசர்வதேசவிசாரணைமற்றும்வழக்குத்தொடரல் பொறிமுறையைநிறுவவேண்டியதன்முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து இலங்கையிலிருந்து நிகழ்நிலை முறைமையில்கலந்துரையாடலில்பங்கேற்று கருத்துரைத்த ஆனந்தராஜ் நடராஜா, 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்துநாட்டைஆட்சிசெய்தஅரசாங்கங்கள் கலவரங்கள், படுகொலைகள், அரச கண்காணிப்புக்கள், ஒடுக்குமுறைகள், வலிந்து காணாமலாக்குதல்கள், காணி அபகரிப்புக்கள்உள்ளடங்கலாகப்பல்வேறுவழிமுறைகளிலும் திட்டமிட்ட இனவழிப்பில் ஈடுபட்டுவந்ததாகக் குறிப்பிட்டார். அதேவேளை இத்தகைய அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டதை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்துவரும் நிலையில், சுதந்திரமான சர்வதேச விசாரணையின் ஊடாக மாத்திரமே இதற்குரிய நீதியை நிலைநாட்டமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற சர்வதேசக் கட்டமைப்புக்களில் முழுமையாகத் தங்கியிருப்பதன் விளைவாக முகங்கொடுக்கவேண்டியிருக்கும் மட்டுப்பாடுகள் குறித்து விளக்கமளித்த அலைன் வேனர், அது தமிழ் மக்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதில் தாமதத்தை ஏற்படுத்தக்கூடும் எனக் கரிசனை வெளியிட்டார்.

எனவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பலதரப்பட்ட தேசிய மற்றும் சர்வதேசப் பொறிமுறைகளின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வதற்கானமுயற்சிகளைமேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மேலும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணியும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் சட்ட ஆலோசகருமான சன் கிம், நீதியை அடைந்துகொள்வதற்கான பயணத்தில் பல்வேறுபட்ட சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டியதன் அவசியம் குறித்து சுட்டிக்காட்டினார். 'சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அங்கம்வகிக்காத நிலையில், சர்வதேச நீதிமன்றம் போன்ற ஏனைய கட்டமைப்புக்களின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளமுடியும்' எனவும் சன் கிம் தெரிவித்தார். (05)



# யாழ். நாவாந்துறையில் வீடொன்றில் தீ விபத்து

யாழ்ப்பாணம் நாவாந்துறைபகுதியில்புதன்கிழமை வீடொன்றில் ஏற்பட்ட தீயால் வீட்டில் இருந்த பெறுமதியான பல பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன.

வீடு தீ பற்றி எரிவதைக் கண்ட அயலவர்கள்தீயினை அணைக்க முற்பட்டதுடன், மாநகர சபை தீயணைப்பு படையினருக்கும் அறிவித்தனர். அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயை அணைத்தனர்.

தீ விபத்துக்கு காரணம் கண்டறியப்படாத நிலையில் யாழ்ப்பாண பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் ஆகியோர்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(05)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கல்முனையில் இருவர் கைது

## கல்முனையில் சம்பவம்

சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்டுகளை முச்சக்கரவண்டி ஒன்றில் சூட்சுமமான முறையில் கடத்தி வந்த இரு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் பெரிய நீலாவணை விசேட அதிரடி படை முகாமில் இருந்து விசேட தேர்ச்சி பெற்ற அணியினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதான வீதியில் வைத்து சந்தேகத்திற்கிடமான முறையில் பயணம் செய்து கொண்டிருந்த முச்சக்கரவண்டியை இடைமறித்து சோதனை மேற்கொண்டனர்.

குறித்த முச்சக்கரவண்டியில் சூட்சுமமான முறையில் பயணப் பொதியில் கடத்தி வரப்பட்ட பெருந்தொகையான சட்டவிரோத வெளிநாட்டு சிகரட் கார்ட்டுன்கள் மீட்கப்பட்டதுடன், இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியுடைய 20,200 சட்டவிரோத வெளிநாட்டு சிகரட்டுகள் கல்முனை பகுதியில் உள்ள பாதணிகள் விற்கின்ற கடை ஒன்றிற்கு கடத்த முற்பட்ட வேளை விசேட அதிரடிப்படையினரால் கைது நடவடிக்கை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓட்டோவில் பயணம் செய்த கல்முனை கடற்கரைப் பள்ளி வீதி ஓட்டோ பசார் சந்தி பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய சந்தேக நபர் உட்பட மருதமுனை ஹாஜியார் வீதி பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய சந்தேக நபரையும் விசேட அதிரடிப்படையினர் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கைதான சந்தேகநபர்கள் சான்றுப்பொருட்களுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொள்கின்றனர்.(05)

# சமஷ்டி ஆட்சி உருவாக்கத்துக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்

## ரொஷான் ரணசிங்க திட்டவட்டம்



நாட்டின் நலனுக்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னெடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம். நாட்டை பிளவுப்படுத்தும் சமஷ்டியாட்சி முறைமை உருவாக்கத்துக்கு ஒருபோதும் இடமளில்லை என தாயக மக்கள் கட்சியின் தலைவர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

தொழிலதிபர் திலித் ஜயவீர தலைமையிலான தலைமையிலான தாயக மக்கள் கட்சியின் தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவும், பிரதி தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமனவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் திலதி ஜயவீரவால் புதன்கிழமை நியமிக்கப்பட்டனர்.

இந்த நியமனத்தை தொடர்ந்து தாயக மக்கள் கட்சியின் தலைமை காரியாலயத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டதாவது,

தொழிலதிபர் திலித் ஜயவீரவை நன்கு அறிவேன். தனது உழைப்பால் அவர் முன்னேறியுள்ளார்.ஆகவே இவ்வாறானவர் அரசியலுக்கு பிரவேசிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளேன். ஊழல் மோசடிக்கு எதிராக குரல் கொடுத்ததால் எமது அரசாங்கத்தில் இருந்து நான் வெளியேற்றப்பட்டேன்.

இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டுக்காக எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஜனாதிபதி தனது கொள்கை பிரகடனத்தில் சமஷ்டியாட்சி அரசமைப்பு முறைமையை உருவாக்குவதாக குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். நாட்டின் ஒற்றையாட்சி பாதுகாக்கப்பட வேண்டும். - என்றார்.(05)

# லிந்துலையில் வீடொன்றை உடைத்து நகைகள் திருட்டு

## சந்தேகநபர் கைது



லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய ராணிவத்த தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை வீடு ஒன்றை உடைத்து மூன்று அரை பவுண் தங்கப் நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்திலேயே, இக்கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளர் லிந்துலை பொலிஸ்நிலையத்தில்செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் நுவரெலியா தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் கைரேகை நிபுணர்கள், மோப்ப நாயுடன்பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பின்னர் அதே பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் பிரவேசித்த பொலிஸ் குழுவினர் 30 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்ததுடன், அவரிடம் நடத்திய விசாரணையில், அவரிடம் இருந்துதிருடப்பட்ட தங்க நகைகளையும் கைபற்றியுள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி ஆறு இலட்சத்திற்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வியாழக்கிழமை முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.(05)



# நல்லூர் கோவிலின் சிறப்பு



இலங்கையில்மிகவும்புகழ்பெற்றஇந்துக்கோயில்களுள் நல்லூர்க் கோயில் முக்கியமானது. இது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள நல்லூரில் அமைந்துள்ளது.

நல்லூர் 12ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்தது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சரான புவனேகபாகு என்பவரால் இக்கோயில் கட்டுவிக்கப்பட்டதெனயாழ்ப்பாணவைபவமாலைகூறுகிறது. இதற்கு ஆதாரமாக 16 அல்லது 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாயமாலை என்னும் நூல் விளங்குகிறது.

இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகத்திற்குப் பதிலாக வேல் வைக்கப்பட்டுள்ளது. இதனைச் சுற்றி பிள்ளையார் முதலான பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயம்கிழக்கிலும்தெற்கிலும்வடக்கிலும்வாசல்களைக் கொண்டுள்ளது. இவற்றின் மேல் பெருங்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் தெற்குப் புறத்திலுள்ள தீர்த்தக்கேணி நன்கு திட்டமிடப்பட்டு படிக்கட்டுகளும் மண்டபங்களும் கொண்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. முருகனின் மூர்த்தங்களில் ஒன்றான தண்டாயுதபாணிக்கு அங்கு சிறு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் உள்ளன. இவ்வாலயத்தில்நித்திய,நைமித்தியபூசைகள்காலந்தவறாது நடைபெறுகின்றன. தினமும் அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி பூஜை இடம்பெறுகின்றமையும் மாலையில் பள்ளியறைப் பூஜை இடம்பெறுகின்றமையும் இந்த ஆலயத்தின் சிறப்புகளின் ஒன்றாகும்.

திருவிழாக் காலங்களில் மட்டுமல்லாமல் தினமும் மாலையில் முருகப்பெருமானை ஊஞ்சற் பாட்டுப்பாடி அழகிய சிறு மஞ்சத்தில் ஏற்றி பள்ளியறையில் துயில் கொள்ளச்செய்வதும்மறுநாள் அதிகாலையில்திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி பாடி முருகனைத் துயிலெழுப்பி அதே சிறு மஞ்சத்தில் அழைத்து வந்து மூலஸ்தானத்தில் அமர்த்துவதும் சிறப்பான மரபாகும். இங்கு ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு 25 நாட்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லை வேல்மருவா போன்ற நூல்கள் இக்கோயிலைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுகின்றன.

**ந.லிஷானா**
**கனகரத்தினம் ம.ம.வி.**

# பெரியபுராணம்

தமிழ் மண்ணிலே பிறந்த பக்தி நெறி தழைக்கச் செய்த நாயன்மார்களைப் பாடிய பெருங்காப்பியமாக பெரியபுராணம் திகழ்கின்றது. இதனை அருளியவர் சேக்கிழார் ஆவார். அவர் சிவனையன்றி வேறு எதையும் சிந்தையில் கொள்ளமாட்டார். தமிழில் பக்திக்கு ஒரு நூல் பெரியபுராணம் என்று கூறினால் மிகையாகாது. சைவசமயத்தின் தெய்வப் பாடல்கள் பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பெற்றன. அதில் பன்னிரண்டாம் திருமுறையாக பெரியபுராணம் காணப்படுகின்றது.

பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்தியும் சில நெகிழ்ச்சிகளை உள்வாங்கியும் இயற்றப்பெற்ற பெருங்காப்பியமாகும். சுந்தரர் எழுதிய திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார்நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களை முதல் நூலாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டது. இந்நூல் அறுபத்து மூன்று அடியார் பெருமக்களை மையமாகக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும் உட்பிரிவாக பதின்மூன்று சுருக்கங்களையும் உடையது.

சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித் தேவர். ஆண், பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும் தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் 'தேசிய இலக்கியம்' என்று சான்றோர்கள் பாராட்டுவர்.

பெரியபுராணத்தைப்பாடதில்லையில்சிவபெருமானே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்ததாக நம்பிக்கையுண்டு. சிவத்தொண்டின் காரணமாகவும், மதிநுட்பத்தின் காரணமாகவும் இவர் உத்தம சோழப் பல்லவன், தெய்வப் புலவர், தெய்வ சேக்கிழார் போன்ற பட்டங்களைப் பெற்றார். உமாபதி சிவாச்சாரியார் என்பவரால் சேக்கிழார் புராணம் எனும் நூலும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்னும் நூலும் சேக்கிழாரை முன்வைத்து இயற்றப்பட்டுள்ளன.

'செயற்கு அரிய செய்வர் பெரியர்' என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறை பக்தியும் தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூலாக பெரிய புராணம் சிறப்பிக்கப்படுகிறது. பெரிய புராணம் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட நூலுக்கு பெரிய என்ற அடை இல்லாத நிலையில் நான்காயிரத்திற்குச் சற்று அதிகமான பாடல்களைக் கொண்ட இந்நூல் பெரிய என்ற அடையைப் பெறுவதற்குக் காரணம் இந்நூல் தொண்டர்களுடைய பெருமையைப் பேசுவதனால் ஆகும். 'தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே' என்ற ஔவையின் வாக்கிற்கு அமைவாக இந்நூல் தொண்டர்களுக்குள்ள பெருமையால் பெரியபுராணம் என்ற பெயரைப் பெற்றது.

சைவசமயத்தின் பெருமைகளை எடுத்தியம்பும் தனித்துவம் மிக்க காப்பியம் என்ற பெருமை பெரிய புராணத்திற்கு உண்டு. தமிழில் எழுந்த கம்பராமாயணம், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், குண்டல கேசி, வளையாபதி என எக்காப்பியமும் இப்பெருமையைப் பெறுவதில்லை. "அலகின்சோதியன் அம்பலத்தாடுவான்" என்றும் ''இன்ன தன்மையன் என்று அறியாச் சிவன்" என்றும் "முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான், அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியான்? முன்னாகி எப்பொருட்கும் முதலாகி நின்றான்" என்றவாறு அமைந்த அடிகள் சிவனது பெருமைகளைச் சுட்டுகின்றன. பக்திச் சுவை சொட்டும் தமிழ்க் காப்பியமாக இது விளங்குகின்றது.

பெரிய புராணத்தின் காப்பிய கதையானது கயிலாயத்தில் தொடங்கப்பெற்று சைவ அடியார்களின் வாழ்க்கையை விவரித்து இறுதியாகக் கைலாயத்தில் முடிகிறது. பெரியபுராணத்தின் முதற்காண்டத்தில் திருமலைச்சருக்கம், தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலை மலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம் என்ற ஐந்து சருக்கங்களைக் கொண்டது. திருத்தொண்டர் புராணத்தின் இரண்டாம் சருக்கத்தில் வம்பறு வரிவண்டு சருக்கம், வாழ் கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம்,பத்தராய்பணிவார்சருக்கம்,மன்னியசீர்ச்சருக் கம்,வெள்ளானைச்சருக்கம்எனும்எட்டுசருக்கங்களும் அமைந்துள்ளன. பெரிய புராணம் பஞ்ச புராணத்தில் இறுதியாகப் பாடப்படுகிறது.

பெரியபுராணம்சார்ந்தசெயற்பாடுகள்குறித்தவிழிப்பு ணர்வுஇன்றையகாலத்தின்தேவையாகஉள்ளது.சமூகங்க ளிடையே ஒற்றுமையை வளர்த்தல், சூழல் பற்றிய சிந்தனைகளை மேலோங்கச் செய்தல் பக்திப் பயிர் செழிப்புறச் செய்தல் சமூகப்பணியில் சமயம் சார்ந்த நிறுவனங்களை, ஆலயங்களை ஊக்குவித்தல், தமிழ் சார்ந்த வழிபாட்டுணர்வுகளுக்கான முதன்மை வழங்கல் முதலிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பெரிய புராணத்திற்கு வழங்குங்கப்படும் முதன்மைக் களம் அமைத்துக் கொடுக்கும் தமிழர்களின் வாழ்வியலில் செந்த இலக்கியங்களைவிட வந்த இலக்கியங் களையேமுதன்மைப்படுத்தும்போக்குகாணப்படுகின்றது.

இலக்கிய அமைப்பில் பாடு பொருளில் கவிச் சிறப்பியல் கற்பனை வளத்தில் பக்தி ரசத்தில் சிறந்து விளங்கும் பெரிய புராணம் பற்றிய விழிப்புணர்வு இளையோரிடத்தில் கட்டியெழுப்பப்படுவது காலத்தின் கடமையாகும். தனியே சைவக் காப்பியம் என்ற வட்டத்துள் இக்காப்பியத்தை வரையறுக்காது தமிழின் செழுமைக்கு அழகு தரும் காப்பியம் என்ற உணர்வை எல்லோரிடமும் விதைத்தல் நலம் தரும்.

**கு. சலுசியா**

காலைக்கதிர் Kalaikkathir

# விவசாயிகளுக்கு மானியம் வழங்க ஆவணசெய்ய மட்டு மாவட்ட விவசாய அதிகாரசபை கோரிக்கை



புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கடந்த காலங்களில் ஹெக்டயருக்கு 15,000 ரூபா வாக இருந்த எங்களுடைய உர மானிய கொடுப்பனவை 25000 ரூபாவாக உடனடியாக வழங் குமாறு பணித்ததையடுத்து விவசா யிகள் அனைவரும் மிகுந்த சந்தோஷத்திலேயே இருந்தனர். ஆனால் இதனை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. எனவே இதனை அரசியலாகப் பார்க்காது விவசாய மக்களினுடைய நலனைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைத் திரும்ப வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும்என மட்டக்களப்பு மாவட்ட விவசாய அதிகார சபையின் மாவட்ட அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு வெயூஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகமாநாட்டில் மாவட்ட விவசாய அதிகாரசபையின் மாவட்ட அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி அனுர குமாரதிசா நாயக்கவுக்கு மாவட்ட அதிகார சபையின் சார்பில் முதலில் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஜனாதிபதி கடந்த சில நாள்கள் சிறந்த சில நடவடிக்கைகளை எமது நாட்டிலும் அரசியலிலும் மேற்கொண்டுவருவது எமது விவசா யிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் சந்தோஷத்தினை அளிக்கின்றது.

அதேபோன்று அவர் விவசாயிகளுக்கான உரம் மானியத்துக்கான ஹெக்டருக்கு 25000 ரூபாவிற்கு மாற்றுவதாக அறிவித்தார். இந்த செய்தியை கேட்டு எமது விவசாயிகள் கிழக்கு மாவட்டத்தில் மிகவும் சந்தோஷமடைந்ததுடன் கடந்த காலங்களிலே எமது விவசாயிகள் கைவிடப்பட்டிருந்த காணிகளையும் பசளைப் பிரச்சனை, பொருளாதார பிரச்சனை காரணமாக கைவிடப் பட்டிருந்த காணிகளையும் நெற்செய்கை செய்வதற்கு என்று சொல்லி திட்டமிட்டு இருந்தார்கள்.

எனினும் ஒரு சில தினங்களில் பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதால் தேர்தல் ஆணையாளர் இவ்வாறான சில கொடுப்பனவுகளை தற்போது மேற்கொள்ள முடியாது எனக்கூறி ஓர் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின் காரணமாக விவசாயிகள் மிகவும் மனவேதனை அடைந்துள்ளனர் எனவே இவ்வா றான ஒரு செயற்பாடானது எமது மாவட்டத்திற்கும் நாட்டுக்கும் எதிர் காலத்திலே உணவு உற்பத்தியிலும் ஏனைய பொருளாதார ரீதியாகவும் பாரிய ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும்.

தற்போது விவசாயிகள் உழவுவேலைகளை ஆரம்பித்து விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு இருக்கின்றார்கள்.

எனவே எமது உர மானியத்துக்கான அதிகரிக் கப்பட்ட கொடுப்பனவை உடனடியாக வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்குப் பெரிய உதவியாக இருக்கும் எனத் தேர்தல் ஆணையத் திடம் பணிவாகக் கேட்டுக் கொள் கின்றோம்.

தற்பொழுது டீசல், பெற்ரோல், மண்ணெண்ணை விலைகள் முதலாம் திகதியிலிருந்து ஜனாதிபதி குறைத்தது விவசாயிகளுக்கு பாரிய நிவாரணமாக அமைகின் றது. எனவே ஜனாதிபதி எதிர்கா லத்தில்; எங்களுக்கான பசளை,களைநாசிகளுக்கான விலைகளைக் குறைத்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டிஎழுப்பவிவசாயிகளுக்குப்பூரணஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்

இருந்த போதிலும் அதனை அடுத்து இந்த பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு அதனை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. மிகுந்த சந்தோஷத்திலேயே விவசாயிகள் அனைவரும் இருந்த போதும் தற்போது பாரிய ஏமாற்றத்தோடும் பாரிய வீழ்ச்சியாகவும் நாங்கள் இதனை எதிர்பார்க்கின்றோம். இதனை அரசியலாகப் பார்க்காது விவசாய மக்களினுடைய நலனை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை திரும்ப வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும். - என்றனர். (05)

# நெல்லியடி புடவைக்கடைக்கு வன்முறை கும்பல் தீ வைப்பு

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் உள்ள புடவைக்கடை ஒன்றுக்கு வன்முறை கும்பலால் தீ வைக்கப்பட்டதில், கடையில் இருந்த பெறுமதியான ஆடைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

நெல்லியடி சந்தைக்கு அண்மையில் உள்ள புடவைக்கடைக்குள் புதன்கிழமை இரவு, மூவர் அடங்கிய வன்முறை கும்பல் ஒன்று அத்துமீறி நுழைந்து அங்கிருந்த ஆடைகள் மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்து விட்டு தப்பிசென்றுள்ளது.

தீ வேகமாக பரவியதில் அங்கிருந்த பெறுமதியான ஆடைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கடந்த வாரம் குறித்த புடைவைக் கடைக்கு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் ஆடைகளுக்கு பெற்றோல் ஊற்றி தீ வைக்க முற்பட்ட வேளை கடையில் நின்றவர்கள் சுதாகரித்துக் கொண்டு , அவர்களை பிடிக்க முற்பட்டவேளை அவர்கள் அங்கிருந்து தப்பி சென்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் மீண்டும் நேற்றையதினம் வன்முறை கும்பல் குறித்த புடவைக்கடைக்கு தீ வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக தெரிவித்துள்ளனர்.(05)



# குஷ் போதைப்பொருள்களுடன் மூவர் கைது ; மூவர் தப்பியோட்டம்

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மூவர் தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட குஷ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 01 கிலோ 883 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கொட்டுகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவராவார்.

இதேவேளை, மிதிகம எப்பாவல பிரதேசத்தில் 01 கிலோ 838 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரொருவரை சோதனையிட்ட போதே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வெலிகம பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர் எனவும், சுற்றிவளைப்பின் போது அங்கிருந்த மேலும் மூவர் பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வெலிப்பனை , கொஸ்கஹதெனிய பகுதியில் 920 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வலகெதர பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ரஞ்சன் ராமநாயக்கவின் பறிக்கப்பட்ட குடியுரிமை மீளவழங்கப்படலாம்



ரஞ்சன்ராமநயக்கவின் பறிக்கப்பட்ட குடியுரிமையை உடனடியாக மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உரிய ஆவணங்களுடன் ஜனாதிபதி அலுவலகத்திற்கு சென்றிருந்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சில ஆவணங்களுடன் வருமாறு கேட்டிருந்தார்கள் என தெரிவித்துள்ள ரஞ்சன்ராமநாயக்க நான் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களை அணுகி குடியுரிமையை மீண்டும் வழங்குமாறு கேட்டிருந்தேன். ஜனாதி பதியை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு எனக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. வாக்களிக்கும் உரிமையையும் நான் இழந்தேன். எனினும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டை எனக்கு கிடைத்தது நான் வெளிநாட்டில் இருந்ததால் வாக்களிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குடியுரிமையை மீளவழங்கினால் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு தற்போதைக்கு அது குறித்து பதிலளிக்க முடியாது என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (05)

# கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் வாள் மற்றும் மன்னா கத்தியுடன் கைதானார்

வெல்லம்பிட்டி வேரகொட களனிதிஸ்ஸகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இரண்டு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் வாள் மற்றும் மன்னா கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் வீட்டில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வாள்களும் மன்னா கத்தியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இரண்டு கொலைச் சம்பவங்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'கசுன்' என்பவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.(05)

# வெளிநாட்டு சிகரட்களை விற்பனை செய்தவர்; கைது

கம்பளை அரச போக்குவரத்து பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக உள்ள வியாபார நிலையத்தில் வெளிநாட்டு சிகரட்களை விற்பனை செய்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது வெளிநாட்டு சிகரட்டுக்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 92 சிகரட் கார்ட்டூன்களுடன் 18,400 சிகரட்டுக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வியாபார நிலையத்தின் உரிமையாளரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2024இல் வெளியிடப்பெற்றது